www.penakural.com

மலர்: 02 இதழ்: 03 ஜனவரி 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்

## பிரதமர் மோடியின் வருகைக்கு பிறகு லட்சத்தீவு தேடல்களில் 3,400% உயர்வு!





அனைவருக்கும் பேனாகுரல் மாத இதழ் சார்பாக புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகள்!

"பிரதமர் நரேந்திர மோடியின் லட்சத்தீவு பயணம் இயற்கை எழில் கொஞ்சும் தீவுகளில் சுற்றுலாவுக்கு ஊக்கம் அளித்துள்ளது"



## கோயம்பேட்டில் பசுமை பூங்கா அமைப்பதற்கு பதிலாக வேறு எதாவது கொண்டுவர நேரிட்டால்

பாமக கடுமையான போராட்டத்தை முன்னெடுக்கும்:

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்

## சென்னை புத்தக திருவிழா தொடங்கி வைத்தார் உதயநிதி



சென்னையில் நடைபெறும் 47வது புத்தக கண்காட்சி பெரும் வெற்றி அடையட்டும்:

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

Happy Birthday!

1st

HAPPY Birthday!



OUR SWEET LITTLE

# தமிழினி

## Tamilni

Join us for a Birthday Celebration
Saturday, Jan 20th 6 O'Clock
3/1111A, 2nd St, Sulaima Nagar, Mettukuppam, Chennai - 97.

பேனா குரல்
PENA KURAL
RNI No.: TNTAM/2022/85375
தமிழ் மாத இதழ்
மலர்: 02 இதழ்: 03 ஜனவரி 2024 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

## தலையங்கம்

### ஆசிரியர் குரல்

# இந்தியாவிற்கு இன்னும் பல சாதனைகள் காத்திருக்கிறது!

இந்தியாவுக்கு பெருமையாக இஸ்ரோ வழங்கியிருக்கும் புத்தாண்டு பரிசு, விண்ணில் செலுத்தப்பட்ட பிஎஸ்எல்வி சி-58 ராக்கெட்டின் வெற்றிப் பயணம். அலைவரிசை, புவி கண்காணிப்பு மற்றும் வர்த்தக ரீதியிலான நடவடிக்கைகளுக்காக புவி தாழ்வட்டப் பாதையில் செயற்கோள்களை நிலைநிறுத்தும் திட்டங்களை இஸ்ரோ தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் சந்திரன், சூரியன், செவ்வாய் உள்ளிட்ட கிரகங்களை ஆய்வு செய்யும் நடவடிக்கைகளிலும் பல வெற்றிகளை அடைந்திருக்கிறது. அந்த வரிசையில் இணைகிறது விண்வெளி ஊடுகதிர் ஆய்வுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ‘எக்ஸ்போசாட்’ செயற்கைக்கோளுடனான பிஎஸ்எல்வி சி-58 ராக்கெட்.

விண்வெளியிலுள்ள கருந்துளையில் இருந்து வெளியேறும் ஊடுகதிர்களை (எக்ஸ்-ரே) ஆய்வு செய்வதற்காக ‘எக்ஸ்போசாட்’, அதாவது, ‘எக்ஸ்-ரே போலாரி மீட்டர் சாட்டிலைட்’ என்கிற செயற்கைக் கோளை இஸ்ரோ வடிவமைத்தது. அதை புத்தாண்டு பரிசாக விண்வெளியில் ஏவியிருக்கிறது.

22 நிமிடங்களில் பூமியிலிருந்து 650 கி.மீ. தூரம் பயணித்து நிர்ணயித்த புவிவட்டப் பாதையில் ‘எக்ஸ்போசாட்’ நிலைநிறுத்தப்பட்டது. அடுத்தகட்டமாக ராக்கெட்டின் நான்காம் நிலையான பிஎஸ்-4 (போயம்) சாதனம் 350 கி.மீ. தொலைவு கீழே கொண்டுவரப்பட்டது. அதற்காக இரண்டு முறை ராக்கெட்டின் என்ஜின் விண்வெளியில் நிறுத்தப்பட்டு மீண்டும் இயக்கப்பட்டது. இதுவே மிகப் பெரிய சாதனை.

நியூட்ரான் விண்மீன்கள் புவியின் நிழலைக் கடந்து செல்லும்போதும், சூரிய அல்லது சந்திர கிரகணங்கள் நிகழும்போதும் அந்த இரண்டு கருவிகளும் துல்லியமாக ஆய்வை மேற்கொள்ளும். பிஎஸ்எல்வி சி-58-இன் நான்காம் நிலையான பிஎஸ்-4 பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் 10 ஆய்வுக் கருவிகளும் பல்வேறு ஆய்வு நடவடிக்கைகளில் அடுத்த சில மாதங்களுக்கு மேற்கொள்ள உள்ளன.

‘எக்ஸ்போசாட்’, ‘எக்ஸ்பெக்ட்’ ஆகிய இரு கருவிகளையும் பெங்களூரில் உள்ள சர் சி.வி. ராமன் ஆராய்ச்சி நிறுவனமும், யூ.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையமும் உருவாக்கியுள்ளன. பிஎஸ்எல்வி சி-58 வெற்றிப் பயணத்துக்கு உதவியிருக்கும் பெரும்பாலான உதிரிபாகங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை என்பதை அடிக்கோடிட்டு குறிப்பிடத் தோன்றுகிறது.

இதுவரை விண்வெளியின் கதிரியக்கம், நிறமாலை (ஸ்பெக்ட்ரோஸ்கோபிக்) குறித்த தரவுகள் தொலைநோக்கி மூலம் மட்டுமே பெறப்பட்டு வந்தன. மின்காந்த அலைக்கற்றை மூலம் பெறப்படும் ரோடியோ அலைவரிசை வாயிலாகவும் கிடைக்கப்பெற்றன. அவை துல்லியமானவை அல்ல. ஊடுகதிர்களின் வாயிலாக விண்வெளித் தரவுகளை இனிமேல் ‘எக்ஸ்போசாட்’ செயற்கைக்கோள் மூலம் துல்லியமாகப் பெற முடியும்.

உலகிலேயே அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக ஊடுகதிர்களின் மூலம், பாதை ஆகியவற்றை அளவிட்டு அதன் வாயிலாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டிருக்கும் இரண்டாவது செயற்கைக்கோள் இந்தியாவின் ‘எக்ஸ்போசாட்’ என்பது நமக்குப் பெருமை. 2021-இல் இத்தாலியுடன் இணைந்து அமெரிக்கா அனுப்பிய ‘ஐ.எக்ஸ்.பி.இ.’ செயற்கைக்கோள், 158 பில்லியன் டாலர் (சுமார் ரூ.1,500 கோடி) செலவில் வடிவமைக்கப்பட்டது என்றால், இப்போது இந்தியா நிலைநிறுத்தியிருக்கும் ‘எக்ஸ்போசாட்’ செயற்கைக்கோளுக்கான செலவு சுமார் ரூ.250 கோடி மட்டுமே எனும்போது நமது இஸ்ரோ விஞ்ஞானிகளின் திறமைக்குத் தலைவணங்கத் தோன்றுகிறது.

குறைந்த செலவில் விண்வெளி சாதனை படைத்து இந்தியாவின் திறமையைப் பார்த்து உலகம் வியந்து போயிருக்கிறது. ஐந்து மாத இடைவெளியில் சந்திரயான்-3, ஆதித்யா எல்-1 ஆகியவற்றைத் தொடர்ந்து மூன்றாவது சாதனை படைத்து விண்ணைத் தொட்டிருக்கிறது இந்தியாவின் இஸ்ரோ.

– ராதிகா சிவசங்கர், ஆசிரியர்



# கோயம்பேட்டில் பசுமை பூங்கா அமைப்பதற்கு பதிலாக வேறு எதாவது கொண்டுவர நேரிட்டால்

## பாமக கடுமையான போராட்டத்தை முன்னெடுக்கும்:

## பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்

கோயம்பேடு பஸ் நிலையம் இருந்த இடத்தில் பொது பசுமை பூங்கா அமைக்க வேண்டும் என தமிழக அரசுக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். சென்னையை அடுத்த ஊரப்பாக்கம் அருகே உள்ள கிளாம்பாக்கத்திற்கு தற்போது பேருந்து நிலையம் மாற்றப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் அனைத்தும் அங்கிருந்தே கிளம்பி செல்கின்றன. வழக்கமாக பொங்கல் பண்டிகை காலங்களில் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் திரும்பிய பக்கம் எல்லாம் பயணிகள் கூட்டம் அலைமோதும்.

ஆனால் தற்போது பேருந்து நிலையம் கிளாம்பாக்கம் கொண்டு செல்லப்பட்டு இருப்பதால் பயணிகள் கூட்டம் இன்றி வெறிச்சோடி காணப்படுகிறது. மாநகர பேருந்துகள் மட்டும் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்பட்டு வருகிறது. கோயம்பேடு பேருந்து நிலையம் ஓராண்டுக்கு மட்டுமே பயன்பாட்டில் இருக்கும் எனவும் அதன்பிறகு அதில் பெரிய திட்டம் ஒன்றை கொண்டு வர திட்டமிட்டு இருப்பதாக அமைச்சர் சேகர் பாபு கூறியிருந்தார்.

இந்த நிலையில், செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ், கோயம்பேட்டில் பசுமை பூங்கா அமைக்க வேண்டும் என்றும் வணிக வளாகம் கட்டக் கூடாது எனவும் கூறியுள்ளார். சென்னை கோயம்பேடு கீரை வணிக வளாகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தமிழ்நாடு மலர் காய் கனி வியாபாரிகள் நலச்சங்கம், கீரை மொத்த வியாபாரிகள் சங்கம் இணைந்து சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.


இதில், சிறப்பு விருந்தினராக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அன்புமணி ராமதாஸ் கூறியதாவது:- கோயம்பேடு வணிக வளாகம் ஆசியாவிலேயே மிகப்பெரிய வளாகம். ஆனால், அடிப்படை வசதிகள் இல்லை. சமீபத்தில் கோயம்பேடு பேருந்து நிலையத்தை வண்டலூர் அருகே உள்ள கிளாம்பாக்கத்திற்கு மாற்றியுள்ளார்கள்.


கோயம்பேட்டில் மாநகர பேருந்துகள் மட்டுமே வந்து செல்கிறது. எனவே, கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்த இடத்தில் பொது பசுமை பூங்காவை அரசு உருவாக்க வேண்டும். இது மிக மிக அவசியமானது. அமைச்சர் சேகர்பாபு சமீபத்தில் பிரமாண்ட திட்டங்கள் வைத்துள்ளோம் என்று கூறினார். வணிக வளாகம், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதை அவர் மாற்றிக்கொள்ள வேண்டும்.

சென்னையில் இந்த பூங்கா மிகவும் அவசியமான ஒன்று. நீரிழிவு, ரத்த அழுத்தம், மன அழுத்தம் போன்ற தொற்றா நோய்களை போக்குவதற்கு இந்த பசுமை பூங்கா மிகவும் அவசியம். சென்னையில் பசுமை பரப்பளவு குறைந்துகொண்டே வருகிறது. இதன் மூலம் லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறுவார்கள். பசுமை பூங்கா அமைப்பதற்கு பதிலாக வேறு எதாவது கொண்டுவர நேரிட்டால் சுற்றியுள்ள மக்களை திரட்டி கடுமையான போராட்டத்தை நடத்துவோம். கோயம்பேடு வணிக வளாகத்தை திருமழிசைக்கு மாற்ற முயன்றாலும் பாமக கடுமையான போராட்டத்தை முன்னெடுக்கும்“ என்றார்.

– ந.மதிவாணன்

# 2023 பூமியின் வெப்பமான ஆண்டு: ஐரோப்பிய யூனியன் காலநிலை அமைப்பு






பூமியில் இதுவரை பதிவான வெப்பநிலை தரவின்படி, கடந்த ஆண்டில் அதிகபட்ச வெப்பநிலை பதிவானது.

இது தொழிற்புரட்சி காலத்தில் பதிவான வெப்பநிலையை விட, 1.48 டிகிரி செல்சியஸ் அதிகம் என ஐரோப்பிய யூனியன் காலநிலை அமைப்பான கோபர்நிகஸ் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

பூமியின் சராசரி வெப்பநிலை அதிகரிப்பை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த 2015 பாரீஸ் பருவநிலை பாதுகாப்பு மாநாட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், 2023-இல் பதிவான சராசரி வெப்பநிலை உயர்வு, 1.5 டிகிரி செல்சியஸை விட சற்றுதான் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வெப்பநிலை உயர்வால் ஐரோப்பா, வட அமெரிக்கா, சீனா என உலகின் பெரும்பாலான பகுதிகள் கடந்த ஆண்டில் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டன.

பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவதால், வறட்சி, வெள்ளம், வெப்ப அலை போன்ற மிகத் தீவிரமான காலநிலை மாற்றங்கள் நிகழ்வதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எத்தியோப்பியா, சோமாலியா, சூடான், தெற்கு சூடான், கென்யா, ஜிபூட்டி, எரித்ரேயா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'ஆப்பிரிக்காவின் கொம்பு' என அறியப்படும் பிராந்தியத்தில் கடந்த ஆண்டில் நிலவிய வறட்சி வழக்கத்தைவிட அதிக காலம் தொடர்ந்தது.

லிபியாவில் பெய்த கனமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ள பெருக்கில், நதியில் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணைகள் உடைந்தன.

இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். கனடாவில் ஏற்பட்ட காட்டுத்தீ வட அமெரிக்காவிலிருந்து ஐரோப்பா வரை காற்று மாசுபாட்டுக்குக் காரணமானது.

நிகழாண்டில் மேலும் அதிகரிக்கலாம்:

கடந்த ஆண்டில் பூமியின் சராசரி வெப்பநிலை 14.98 டிகிரி செல்சியஸ் என கோபர்நிகஸ் கணக்கிட்டுள்ளது.

இது முந்தைய மிகவும் வெப்பமான ஆண்டான 2016-இல் பதிவான வெப்பநிலையை விட 0.17 டிகிரி செல்சியஸ் அதிகமாகும்.


இது தொடர்பாக கோபர்நிகஸின் துணை இயக்குநர் சமந்தா பர்ஜஸ் கூறுகையில், '1.5 டிகிரி செல்சியஸ் இலக்கிலிருந்து நாம் பின்வாங்க கூடாது.

வெப்பநிலை உயர்வால் ஏற்படும் காலநிலை மாற்ற நிகழ்வுகள் நம்மை மட்டும் அல்லாமல், நம்முடைய வரும் தலைமுறையினரையும் பாதிக்கும்.

கடந்த ஆண்டில் ஜூன் மாதத்திலிருந்து தொடர்ந்து 7 மாதங்களுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகபட்ச வெப்பநிலை பதிவானது.

– பி.ஸ்டாலின்





# நாட்டை பெருமைப்படுத்திய ராணி வேலுநாச்சியார்: பிரதமர் மோடி புகழாரம்

“ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நம் பாரத பூமியை சாதனை பெண்கள், பெருமைப்படுத்தி உள்ளனர். சாவித்ரிபாய் புலேயும், ராணி வேலுநாச்சியாரும் நாட்டின் முக்கியமான பெண்கள்” என பிரதமர் மோடி கூறியுள்ளார்,

**வாழ்த்து**

இந்த ஆண்டின் கடைசி மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: நாளை ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கிறது. அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். இன்று இந்தியாவின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படுகிறது. தீபாவளி பண்டிகை காலத்தில் அதிகளவு விற்பனை நடந்தது. இதன் மூலம் உள்ளூர் பொருட்களுக்கு மக்கள் எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

**பெருமை**

2024 ல் இந்தியா தன்னம்பிக்கையோடு செயல்படும். 2023ல் பொருளாதாரத்தில் இந்தியா வளர்ச்சி பெற்றுள்ளது. சந்திரயான்3 வெற்றிக்கு பின்னணியில் உள்ள விஞ்ஞானிகளை நினைத்து பெருமைப்படுகிறோம். இந்த வெற்றிக்காக இன்னும் தனக்கு பாராட்டுகள் வந்து கொண்டு உள்ளன.

2023ம் ஆண்டில், மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் இயற்றப்பட்டது. உலகின் 5வது மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவானதற்கு மகிழ்ச்சி தெரிவித்து பலர் கடிதம் எழுதி வருகின்றனர். ஜி20 மாநாட்டின் வெற்றி குறித்தும் பலர் நினைவு கூருகின்றனர்.

ஆசிய பாரா விளையாட்டு, மகளிர் உலக கோப்பை கிரிக்கெட், 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் டி 20 உலக கோப்பை கிரிக்கெட் ஆகியவற்றில் நமது வீரர்கள் வெற்றி பெற்று நாட்டை பெருமை அடைய வைத்துள்ளனர். இந்த சாதனை 2024ல் நடக்கும் பாரிஸ் ஒலிம்பிக்கில் தொடர வேண்டும். இதற்காக வீரர்களை அனைவரும் ஊக்கப்படுத்தி வருகின்றனர். புதுமைக்கான மையம் ஆக இந்தியா மாறி உள்ளது. உலகளவில் இந்திய பல்கலைக்கழகங்கள் சிறந்து விளங்குகின்றன.

**இளைஞர்கள் பலன்**

இந்தியாவை பற்றிய நம்பிக்கை மற்றும் உற்சாகம் நாடு முழுவதும் பரவி காணப்படுகிறது. இது நல்ல விஷயம். இந்தியா வளர்ந்த நாடாக மாறினால், இளைஞர்கள் அதிகம் பலன்பெறுவார்கள். 2023ம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்பட்டது. இதனால், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் சிறந்த பலன் பெற்றன.

**செயற்கை நுண்ணறிவு**

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சிக்காக தமிழகத்தில் இருந்து காசிக்கு வந்தவர்களோடு நான் செயற்கை நுண்ணறிவு கருவி மூலம் கலந்துரையாடினேன். நான் ஹிந்தியில் உரையாற்றினேன். அதனை

அவர்கள் தமிழில் அப்போதே கேட்டார்கள். மொழிபெயர்ப்பு சார்ந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து இளைஞர்கள் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

**சாதனை பெண்கள்**

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நம் பாரத பூமியை சாதனை பெண்கள், பெருமைப்படுத்தி உள்ளனர். சாவித்ரிபாய் புலேயும், ராணி வேலுநாச்சியாரும் நாட்டின் முக்கியமான பெண்கள்.

**சாவித்ரிபாய் புலே**

சாவித்ரிபாய் புலே பெயரை கேட்டதும், கல்வி மற்றும் சமூக சீர்திருத்தத்தில் அவர் ஆற்றிய பங்கு தான் நமக்கு நினைவுக்கு வரும். பெண்கள் மற்றும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். தவறான நடைமுறைகளுக்கு எதிராக குரல் கொடுத்தார். கல்வி மூலம் சமுதாயத்தை அதிகாரம் பெற செய்ய முடியும் என முழுமையாக நம்பினார். மஹாத்மா ஜோதிராவ் கோவிந்தராவ் புலே உடன் இணைந்து பெண்களுக்காக பள்ளிகளை திறந்தார். அவர் இயற்றிய கவிதைகள் மக்கள் மத்தியில் தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**வேலுநாச்சியார்**

அன்னிய ஆட்சிக்கு எதிராக போராடிய நாட்டின் பல பெரிய ஆளுமைகளில் ராணி வேலுநாச்சியாரும் ஒருவர். தமிழகத்தில் உள்ள என் சகோதர, சகோதரிகள் இன்னும் அவரை வீரமங்கை என்ற பெயரில் நினைவு கூருகிறார்கள்.ஆங்கிலேயர்களுக்கு எதிராக ராணி வேலு நாச்சியார் காட்டிய வீரமும் தைரியமும் அனைவருக்கும் இன்னும் ஊக்கமளிக்கும்.

சிவகங்கையை ஆண்ட அவரது கணவரை, ஆங்கிலேயர்கள் கொன்றனர். அப்போது, ராணி வேலுநாச்சியாரும், அவரது மகளும் தப்பினர். மருது சகோதரர்களுடன் இணைந்து ஒரு படையை உருவாக்குவதிலும், அதற்கு வீரர்களை சேர்ப்பதிலும் பல ஆண்டுகளாக மும்முரமாக இருந்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர் தொடுத்தார். மிகப்பெரிய தைரியத்துடன் போரிட்டார். படையில் முதன்முறையாக மகளிர் குழுவை உருவாக்கியவர்களில் ராணி வேலுநாச்சியாரின் பெயர் இடம் பெற்றுள்ளது. இந்த இரண்டு துணிச்சலான பெண்களுக்கு எனது அஞ்சலியை தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

- பா.கார்த்திகேயன்

# ரூ.2,000 நோட்டு செல்லும்: ரிசர்வ் வங்கி தகவல்



ரூ.2000 நோட்டுகள் தொடர்ந்து சட்டப்படி செல்லுபடியாகும் எனவும், இதுவரை 97.38 சதவீத நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும் இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு ரூ.500, ரூ.1,000 நோட்டுகள் பண மதிப்பிழப்பு செய்யப்பட்டன. அவற்றுக்குப் பதில் புதிதாக ரூ.500 மற்றும் ரூ.2,000 நோட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் ரூ.2,000 நோட்டுகளை செப்டம்பர் 30ம் தேதிக்குள் வங்கிகளில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் என்று கடந்த மே 19ம் தேதி ரிசர்வ் வங்கி அறிவித்தது. அதன்பின், ஒரு வாரம் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டது. ஆனாலும் ரூ.2000 நோட்டுகள் இன்னும் செல்லுபடியாகும் என இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இது குறித்து ரிசர்வ் வங்கி தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது: 2023ம் ஆண்டு மே 19ம் தேதி, ரூ.3.56 லட்சம் கோடி மதிப்பிலான 2,000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. டிச.,29ம் தேதி, ரூ.9,330 கோடி மட்டுமே புழக்கத்தில் இருந்தது. அதாவது, 97.38 சதவீத நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. ரூ.2,000 நோட்டுகள் தொடர்ந்து சட்டப்படி செல்லுபடியாகும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

- A.தங்கராஜ்




# யுபிஐ பணப் பரிவர்த்தனைக்கு புதிய விதிமுறைகளா?

இந்தியாவில் யுபிஐ பயன்பாட்டில் பல அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன,. புதிதாக சில விதிகள் இதில் சேர்க்கப்பட்டு உள்ளன. இப்போதெல்லாம் நாடு முழுக்க ஆன்லைன் வர்த்தகம் அதிகம் ஆகிவிட்டது. முக்கியமாக கூகுள் பே, போன் பே, பேடிஎம் போன்ற யுபிஐ சாதனங்கள் மூலம் பணம் செலுத்துவது அதிகம் ஆகிவிட்டது. சாதாரணமாக டீ குடிப்பது தொடங்கி வீட்டு வாடகைக்கு, மின்சார பில் கட்டுவது வரை பல விஷயங்களுக்கு மக்கள் யுபிஐ மூலம் பணம் செலுத்தும் முறையை பின்பற்றுகிறார்கள்.

இதன் காரணமாக நேர விரயம் குறைகிறது. ஏடிஎம்மில் பணம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏடிஎம் சார்ஜ் இல்லை. அதோடு உடனடியாக பணம் செலுத்த முடிகிறது. கையில் எப்போதும் பணத்தோடு இருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களில் யுபிஐ பேமெண்ட் மக்களின் வாழ்க்கையில் ஒரு அங்கம் ஆகிவிட்டது.

**எங்கும் யுபிஐ;** அனைத்து விதமான சேவைகளுக்கும் தற்போது யுபிஐ பயன்பாடு வந்துவிட்டது. பெரிய பெரிய நிறுவனங்கள் தொடங்கி சாதாரண சாலையோர கடைகளுக்குகூட யுபிஐ வந்துவிட்டது. அதேபோல் பெரிய பெரிய அரசு நிறுவனங்கள் கூட யுபிஐ பயன்பாட்டை தொடங்கிவிட்டன. இன்னொரு பக்கம் ஆன்லைன் பேமெண்ட் அனைத்தும் தற்போது யுபிஐ சேவையை வழங்குகின்றன. மக்களும் யுபிஐ பயன்பாட்டை வெகுவாக விரும்ப தொடங்கிவிட்டனர்.

**மருத்துவமனை;** இந்த நிலையில், மருத்துவமனை, கல்வி நிலையங்களில் UPI மூலம் அதிகபட்சமாக ₹5 லட்சம் வரை பரிவர்த்தனை செய்ய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது. முன்னதாக ₹1 லட்சம் வரை மட்டுமே பரிவர்த்தனை செய்ய முடியும். தற்போது 5 லட்சம் ரூபாய் வரை பணம் பரிவர்த்தனை செய்ய மருத்துவமனைகளில் மட்டும் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

அதிகரித்து வரும் ஆன்லைன் பேமெண்ட் மோசடிகளை தடுக்க, இரண்டு நபர்களுக்கு இடையே முதல் முறையாக நடக்கும் யுபிஐ பரிவர்த்தனைக்கு கட்டுப்பாடுகளை விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

**புத்தாண்டு:** இந்த நிலையில்தான் புத்தாண்டை முன்னிட்டு புதிய விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இந்தியாவில் யுபிஐ பயன்பாட்டில் பல அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன,. புதிதாக சில விதிகள் இதில் சேர்க்கப்பட்டு உள்ளன.

ஓராண்டுக்கு மேல் செயல்படுத்தப்படாமல் இருக்கும் யுபிஐ ஐடிகளை செயலிழக்கச் செய்ய கூகுள் பே, Paytm செயலிகளுக்கு என்பிசிஐ அறிவுறுத்தல். மோசடிகளை தடுக்க ₹2,000-க்கு மேல் செய்யப்படும் முதல் பணப் பரிவர்த்தனைக்கு 4 மணி நேரம் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

யுபிஐ பரிவர்த்தனையில் டேப் அண்ட் பே வசதியும் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது. ப்ரீபெய்டு பேமண்ட் கருவி மூலம் ₹2,000க்கு மேல் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு 1.1% பரிமாற்ற கட்டணம் நடைமுறைக்கு வந்துள்ளது.

நாடு முழுவதும் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான பரிவர்த்தனை உச்சவரம்பு ₹5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் யுபிஐ ஏ.டி.எம்களை நிறுவ ஏற்பாடு. இதன்மூலம் QR Code-ஐ ஸ்கேன் செய்து பணம் எடுக்கலாம். அதேபோல் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் பணம் அனுப்பும் பரிவர்த்தனைக்கு குறைந்தபட்ச நேரத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன்படி முதல்முறை நீங்கள் ஒரு கணக்கிற்கு 2,000 ரூபாய் அனுப்புகிறீர்கள் என்றால்.. அதன்பின் மீண்டும் அவர்களுக்கு பணம் அனுப்ப 4 மணி நேரம் காத்திருக்க வேண்டும்.

- S.விக்னேஷ்

# தமிழ்நாட்டில் சாதிவாரி கணக்கெடுப்பு விரைந்து நடத்த வேண்டும்

## பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்




பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் தலைமையில் ‘‘சமூகநீதி காக்க சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு’’ கருத்தரங்கம் சிதம்பரம் ஸ்ரீ நிவாசா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி ராமதாஸ், ‘‘ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழர்களின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு வளர்ச்சி பெற ஜாதிவாரி கணக்கெடுப்பு அவசியம். பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் ஜாதிவாரி கணக்கெடுப்பை எடுத்து முடித்துள்ளன. விலங்குகள், பறவைகளை கணக்கெடுக்கும் நீங்கள், மனிதனுக்கு நல்லது செய்ய சாதிவாரி கணக்கெடுப்பு மட்டும் எடுக்க மறுப்பது ஏன்?

தமிழ்நாட்டில் ஜாதிவாரியாக கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை என்றால் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும். 2,000 ஆண்டுகளாக ஜாதியை வைத்துதான் அடக்குமுறை செய்து வருகின்றனர். ஜாதி பார்த்து அமைச்சர் பதவி கொடுக்கும் திமுக அரசு, ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மட்டும் ஏன் மறுக்கிறார்கள்? பிரசாந்த் கிஷோர் மூலம் திமுக கணக்கெடுப்பு நடத்தியுள்ளது. அதன் மூலமே தேர்தல்களில் திமுக வெற்றி பெற்றுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலகத்தில் 6 முறை ஜாதிவாரி கணக்கெடுப்பு நடைபெற்றது. சமூக நீதிக்காக தொடர்ந்து போராடுபவர் ராமதாஸ். தமிழ்நாட்டில் 438 சாதிகள் இருக்கின்றன. அவர்களுக்கு எந்த அடிப்படையில் இட ஒதுக்கீடு கொடுக்கப்படுகிறது’’ என்றார்.

- துரை. சந்துரு

# கேன்சருக்கு காரணமாகும் பிளாஸ்டிக் பாட்டில்களா?

## - எச்சரிக்கும் ஆய்வு

நீங்கள் நீரை பல மாதங்கள் சேமித்து குடித்தாலே அதற்கு குடிப்பதற்கு தகுதி அற்றது என்பது தெரியுமா. வாட்டர் பாட்டிலில் இருதய நோய், புற்றுநோய் அபாயத்தை ஏற்படுத்தும் ஏராளமான நச்சுப் பொருட்கள் உள்ளன. உண்மையில் வாட்டர் பாட்டில் நீரை குடிக்கலாமா வாங்க தெரிஞ்சுக்கலாம்.

இன்றைய நவீன கால கட்டத்தில் பாட்டில் தண்ணீர் மிகவும் பிரபலமாகி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான மக்கள் பாட்டில் தண்ணீரைத் தான் வாங்குகிறார்கள். எங்கே போனாலும் இது எளிதில் கிடைப்பதால் இதன் பயன்பாடு சாதாரணமாகி விட்டது. ஆனால் இந்த வாட்டர் பாட்டிலில் தண்ணீர் குடிப்பதால் ஏகப்பட்ட சுகாதார தீமைகள் நமக்கு ஏற்படு கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். பழைய வாட்டர் பாட்டிலை நீங்கள் தூக்கி போடாமல் அதை மீண்டும் பயன்படுத்துவது அதிலிருக்கும் ரசாயனங்கள் தண்ணீருக்குள் கசிந்து பல பிரச்சினைகளை உண்டாக்குகிறது. இதுகுறித்து நிபுணர்கள் கூறுகையில், வாட்டர் பாட்டிலில் ஒரு சிப் குடித்தவுடன் உங்க உதடு மற்றும் வாய் பகுதியில் நுண்ணுயிரிகள் பெருகத் தொடங்குகின்றன. எனவே பாட்டிலில் அடைக்கப்பட்ட பழைய தண்ணீரில் ஏராளமான நுண்ணுயிரிகள் உள்ளன.

கண்ணாடி பாட்டிலில் வைத்தால் கூட ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு மேல் நுண்ணுயிரிகள் வளரத் தொடங்கி விடுகின்றன. எனவே மேசை அல்லது நாற்காலி மேல் 1-2 நாட்களுக்கு மேல் இருந்த பாட்டில் தண்ணீரை குடிக்காதீர்கள் என எச்சரிக்கை விடுவிக்கின்றனர். மேலும் காற்றில் உள்ள கார்பன்டை ஆக்ஸைடுடன் பாட்டிலில் உள்ள H2O தொடர்பு கொள்வதில் அதன் pH அளவு மாறுகிறது.

### பாட்டில் தண்ணீரால் உண்டாகும் பிரச்சனைகள்

பெரும்பாலான வணிக பாட்டில் நீர் இரண்டு வருடங்கள் வரை ஒன்றும் செய்யாது என போடப்படுகிறது. ஆனால் அது சீல் வைக்கப்பட்டு இருக்கும் வரை தான் அந்த ஆயுட்காலம். அதே மாதிரி எவ்வளவு சிறந்த பாட்டிலாக இருந்தாலும் ஒரு வாரத்திற்கு மேல் வைத்து இருந்து குடிக்கக் கூடாது. அதே மாதிரி பாட்டில்களின் காலவதி தேதியை பார்த்து வாங்க வேண்டும்.

அதே மாதிரி திரும்பவும் அந்த பாட்டில்களை பயன் படுத்துவது பாக்டீரியா பெருக்கத்தை அதிகரிக்கிறது. கண்ணாடியின் விளிம்பை அழுக்கு விரல்களால் தொடுவது, பாத்ரூமிற்கு போய்ட்டு வந்த பிறகு பாட்டில் மூடியை கைகளால் தொடுவது நோய்களை உண்டாக்கும் பாக்டீரியாக்களை உற்பத்தி செய்கிறது.

### பாட்டிலில் நடக்கும் வேதிவினை

பிளாஸ்டிக் பாட்டில்கள் சூரிய ஒளி வெப்பத்துடன் வினைபுரிந்து மோசமான விளைவை உண்டாக்குகிறது. பிஸ்பெனால்-ஏ, அல்லது பிபிஏ எனப்படும் ஒரு வேதிப் பொருள், பிளாஸ்டிக் தயாரிக்கப் பயன்படுத்தப்படும். இந்த வேதிப்பொருள் பாட்டில் சூரிய ஒளியுடன் தொடர்பு கொள்ளும் போது அது தண்ணீரில் கசிய வாய்ப்புள்ளது. இந்த தண்ணீரை குடிக்கும் போது ஹார்மோன் சீர்குலைவு, இதய நோய் மற்றும் புற்றுநோய் போன்ற பிரச்சினைகளை உண்டாக்குகிறது. எனவே பிளாஸ்டிக் பாட்டிலை ஒரு முறை பயன்படுத்திய பிறகு மறுசுழற்சி செய்வது அவசியம். உலோகம் அல்லது கண்ணாடியால் நிரப்பப்பட்ட கொள்கலனை நீங்கள் பயன்படுத்தலாம்.

பாட்டில் நீர் பொதுவாக பி.இ.டி (பாலிஎதிலீன் டெரெப்தாலேட்) மற்றும் எச்டிபிஇ (உயர் அடர்த்தி கொண்ட பாலிஎதிலீன்) ஆகியவற்றால் ஆன பாட்டில்களில் தயாரிக்கப்படுகிறது. இந்த பிளாஸ்டிக்குகள் ஓரளவு நுண்துகள்கள் கொண்டவை, மேலும் இந்த பாட்டில்களில் சேமிக்கப்படும் நீர் அதன் சுற்றுப்புறங்களின் வாசனை சுவையை எடுக்கத் தொடங்கும். எனவே உங்க தண்ணீர் வாசனை அடிக்கத் துவங்கும். எனவே ஒரு வேளை வாசனை அடிக்கத் துவங்கினால் அதை தவிர்ப்பது நல்லது.

### குடிக்கின்ற தண்ணீரை சேமிக்கலாமா

தண்ணீரை நீங்கள் சேமித்து வைப்பது அது குடிப்பதற்கு தகுதியற்றதாக மாறுகிறது. இது குறித்து

சுற்றுச்சூழல் சேவைகள் மைய பொறியாளர்கள் கூறுகையில், பெரும்பாலான வல்லுநர்கள் குழாய் நீருக்கு ஆறு மாத ஆயுள் இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால் தண்ணீரை சேமிப்பது தகுதியானது கிடையாது. அந்த நீரில் குளோரின் பாக்டீரியா மற்றும் ஆல்கா வளரத் தொடங்கும். அதுவும் உங்க தண்ணீரை சூடான அல்லது குளிர்ந்த இடத்தில் சேமித்து வைத்தால் அது மிக வேகமாக வளரத் தொடங்கும். பாட்டில் சீல் வைக்கப்பட்ட தண்ணீரே சிறந்தது.

ஒரு வாரத்திற்கு மேல் திறந்த பாட்டில் தண்ணீரை குடிக்காதீர்கள். கடைகளில் விற்கப்படும் வாட்டர் பாட்டில்களை 12 மாதங்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும். அப்படி இல்லையென்றால் வாசனை அல்லாத ப்ளீச் சேர்த்து 30 நிமிடங்கள் கழித்து தண்ணீரை குடிப்பது பாதுகாப்பாக இருக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர். பாட்டிலில் அடைக்கப்பட்ட தண்ணீரை விட குழாய்களில் வரும் தண்ணீர் ஓரளவுக்கு பாதுகாப்பானது.

**பாட்டில் நீர் எப்படி இருக்க வேண்டும்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் கூற்றுப்படி, உடனடி சுகாதார அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய மாசுபாட்டைக் காட்டும் சோதனை முடிவுகளை நகராட்சி நீர் அமைப்புகள் வாட்டர் பாட்டில்களில் சோதனை நடத்தி முடிவுகளை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். எஃப்.டி.ஏ-க்கு பாட்டிலில் அடைக்கப்பட்ட நீர் ஈ.கோலை இல்லாமல் இருக்க வேண்டும். வாட்டர் பாட்டில் நிறுவனம் பொதுவாக தண்ணீரை சோதிக்காது. அதற்கு பதிலாக அவ்வப்போது சோதனை நடத்த எஃப்.டி.ஏ இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

உதாரணமாக உங்க குழாய் நீரில் ஈ கோலை பாக்டீரியா இருந்தால் அது உங்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். பாட்டிலில் அடைக்கப்பட்ட நீர் குழாய் விட தூய்மையானது போல் விற்பனை செய்யப்படுகிறது, ஆனால் பல ஆய்வுகள் இது நிச்சயமாக தூய்மையானவை அல்ல என்பதைக் காட்டுகின்றன.

பாட்டிலில் அடைக்கப்பட்ட நீர் குறித்த விரிவான 2018 ஆய்வில், பிளாஸ்டிக் பாட்டிலை கடைகளில் வாங்குவதை விட பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பது நல்லது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சமீபத்தில் 45 பாட்டில் வாட்டர் பிராண்டுகள் பரிசோதிக்கப்பட்டன. அதில் ஆர்சனிக் போன்ற நச்சு உலோகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆர்சனிக் அளவு வாட்டர் பாட்டிலில் வரம்பு மீறி இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இது இருதய நோய் மற்றும் சில வகை புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கிறது. குழந்தைகளின் IQ மற்றும் உடல் நலனை பாதிக்கிறது.

**பிளாஸ்டிக் துகள்களால் நிரப்பப்படலாம்**

உலகெங்கிலும் இருந்து 259 பாட்டில் நீரை பகுப்பாய்வு செய்த ஆய்வில், அவற்றில் 93 சதவிகிதம் "மைக்ரோபிளாஸ்டிக்" என்ற செயற்கை பாலிமர் துகள்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். ஒரு லிட்டர் பாட்டில் தண்ணீருக்கு 325 மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். இது குறித்து ஆராய்ச்சி செய்த போது இந்த தண்ணீரை குடிக்கும் மனிதர்களுக்கு சுகாதார பிரச்சினைகள் ஏற்படுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

கூடுதலாக, சர்வதேச சுற்றுச்சூழல் சட்ட மையத்தின் தரவும் பிளாஸ்டிக் அதன் வாழ்க்கைச் சுழற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் மனித ஆரோக்கியத்திற்கு தனித்துவமான அபாயங்களை ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டறிந்துள்ளது. இதனால் இருதய நோய், புற்றுநோய், ஆட்டோ இம்பினியூ டிஸ் ஆர்டர் ஏற்படுகிறது. மேலும், சில வகை பிராண்ட் பாட்டில்களில் டலரோமைசஸ் பென்சிலியம் இருப்பது தெரிய வந்துள்ளது. இது ஒரு அச்சு ஆகும். இது ஒவ்வாமை எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் மற்றும் இதை உள்ளிழுத்தால் அல்லது தொட்டால் காய்ச்சல் அறிகுறிகளை ஏற்படுத்தும்.2006-ல் பாட்டில் நீரில் பூஞ்சை பற்றிய வழக்கு ஆய்வில் பாட்டிலில் அதிகப்படியான பூஞ்சை இருப்பது தெரிய வந்துள்ளது. குறிப்பாக நீரை சுத்திகரிக்கும் வடிப்பான்களில் இந்த பூஞ்சை படர்ந்து இருப்பது தெரிய வந்துள்ளது.

**புற்றுநோயை உண்டாக்கும் பித்தலேட்டுகள்**

அக்டோபர் 2018-ம் ஆண்டு நீர் ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்ட ஆய்வில், புற்றுநோய்க்கான அதிக ஆபத்துடன் தொடர்புடைய பிளாஸ்டிக்குகளில் சேர்க்கப்படும் பொருட்களான பித்தலேட்டுகள் வாட்டர் பாட்டில் தண்ணீரில் இருப்பதாக தெரிய வந்துள்ளது. 21 நாடுகளில் உள்ள பாட்டில் நீரில் ஐந்து பிரதிநிதி பித்தலேட்டுகளை தரவு பகுப்பாய்வு செய்தது. இதனால் ஈஸ்ட்ரோஜெனிக் விளைவுகள் உண்டாகிறது.

குளோரோஃபார்ம் மற்றும் புரோமோஃபார்ம் போன்ற பல ட்ரைஹலோமீதன்களும் புற்றுநோய் அபாயத்தை உண்டாக்குகிறது. இந்த நச்சுக்களும் வாட்டர் பாட்டிலில் காணப்படுகிறது. மனித புற்றுநோயாக சந்தேகிக்கப்படும் ப்ரோமேட் எப்போதாவது பாட்டில் தண்ணீரில் காணப்படுகிறது. மேலும், இதுகுறித்த ஆய்வில், ஒரு பாட்டில் நிறுவனம் ஒரு பில்லியன் புரோமேட்டுக்கு 20 பாகங்கள் கொண்ட தண்ணீரை உற்பத்தி செய்துள்ளது, இது சட்ட வரம்பை விட இரண்டு மடங்கு அதிகம் என்பது தெரிய வந்துள்ளது.

எனவே நீங்கள் பயன்படுத்தும் வாட்டர் பாட்டில்களில் அடைக்கப்பட்ட தண்ணீரில் ஏராளமான தீமைகள் மறைந்துள்ளன என்பதை மறவாதீர்கள். எனவே முடிந்த வரை பாட்டில் தண்ணீரை பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது என்கிறது ஆராய்ச்சிகள். மேலும் தண்ணீரை சேமித்து பயன்படுத்தும் போது அதை பாதுகாப்பாக சுத்தம் செய்து பயன்படுத்துங்கள்.

- K.அழகர்சாமி



# திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்

வருடத்தில் மார்கழி மாதம் மட்டுமே காணக்கூடிய நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தேவாரம் மற்றும் திருப்புகழ் பாடல் பெற்ற கொங்குநாட்டு தலங்களில் ஒன்றான, அம்மையும் அப்பனும் ஒன்றாக காட்சி தரும் தலமான, உமையம்மை கேதார கௌரி விரதம் இருந்து சிவபெருமானின் இடப்பாகம் பெற்ற தலமான, பிருங்கி மகிரிஷிக்கு சிவனும் சக்தியும் ஒன்றே என்ற தத்துவத்தை உணர்த்த அம்மையப்பராய் காட்சி அளித்த இடமான திருச்செங்கோடு என்ற திருக்கொடிமாடச்செங்குன்றூர் அர்த்தநாரீஸ்வரர் (அம்மையப்பர்) திருக்கோயில் மரகத லிங்கம் மார்கழி மாதத்தில் மட்டுமே காண முடியுமாம் இந்த அதிசய லிங்கம் தமிழ்நாட்டில், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சியில் திருச்செங்கோடு மலையின் மீது அமைந்துள்ளது அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில். இங்கு மூலவர் அர்த்தநாரீஸ்வரரும், தாயார் பாகம்பிரியாளும் அருள்பாலித்து வருகிறார்கள்.

இந்தக் கோயிலில் என்ன அதிசயம் என்றால், இங்கு மார்கழி மாதம் மட்டும் பிருங்கி முனிவர் வழிபட்ட மரகத லிங்கத்தை வைத்து வழிபடப்படுகிறதாம். மற்ற மாதங்களில் அதற்குப் பதிலாக வேறு ஒரு லிங்கம் வைத்து வழிபடுகிறார்கள். இதற்காக, குறைந்தது 5 மணிக்குள்ளாக கோவிலில் இருக்க வேண்டும்.

**பிருங்கி முனிவர் வழிபட்ட மரகத லிங்கம்**

முன்பு ஒரு காலத்தில் ஆதிஷேசனும் வாயுதேவனும் தங்களில் யார் பலசாலி என அறிய இருவரும் போர் புரிந்தனர். அந்தப் போரினால் உலகில் அதிக பேரழிவுகள் ஏற்பட்டன. இந்தத் துன்பங்களை கண்ட முனிவர்களும், தேவர்களும் அவர்களிடம் யார் பலசாலி என்பதை அறிய ஒரு வழி கூறி அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பலசாலி என்றனர். அதன்படி ஆதிஷேசன் தன்படங்களால் மேருமலை சிகரத்தின் முடியை அழுத்திக் கொள்ள வேண்டும். வாயுதேவன் தன் பலத்தால் பிடியைத் தளர்த்த வேண்டும் என்று கூறினார்கள்.

ஆனால் வாயுதேவனால் பிடியைத் தளர்த்த முடியவில்லை. இதனால் கோபம் கொண்ட வாயுதேவன் தன் சக்தியை அடக்கி கொண்டார். இதனால் உயிரினங்கள் அனைத்தும் வாயு பிரயோகமற்று மயங்கின. இந்தப் பேரழிவை கண்ட முனிவர்களும், தேவர்களும் ஆதிஷேசனிடம் பிடியைத் தளர்த்த வேண்டினார்கள்.

ஆதிஷேசன் தன் பிடியைக் கொஞ்சம் தளர்த்தினார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட வாயுதேவன் தன் சக்தியால் அப்பகுதியை வேகமாக மோதி அச்சிகரத்துடன் ஆதிஷேசனின் சிரத்தையும் சேர்த்து பூமியில் மூன்று செந்நிற பாகங்களாய் சிதறி விழுந்தது. அவற்றிலொன்று திருவண்ணாமலையாகவும், மற்றொன்று இலங்கையாகவும், மற்றொன்று நாகமலையாகவும் (திருச்செங்கோடு) காட்சியளிக்கிறது. இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த நாகமலையில் பல அற்புதங்கள் உள்ளன. இவ்விடத்தில் ஐந்து

தலைகளுடன் ஆதிசேஷனின் முழு உருவமும் 60 அடி நீளத்தில் பார்ப்பதற்கே பிரம்மாண்டமான தோற்றத்தில் நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது.

நாகரின் முழு உடலிலும் பக்தர்கள் மஞ்சளையும் குங்குமத்தையும் கலந்து பூசி உள்ளனர். இவ்வாறு மஞ்சள் குங்குமம் தடவி வழிபடும்போது நாக தோஷம் நீங்குவதாக நம்பிக்கை. படமெடுத்த நிலையில் அமைந்துள்ள ஆதிசேஷன் லிங்க வடிவைத் தாங்கி நிற்பது சிறப்பு.

**மரகத லிங்கத்தின் வரலாறு:**

பிருங்கி முனிவர், கயிலாயம் வரும் வேளைகளில் சிவபெருமானை மட்டும் வழிபட்டு விட்டு, அவரது அருகில் இருக்கும் உமாதேவியை வழிபடாமல் விட்டு விடுவார்.

இருவரும் ஒன்றாக அமர்ந்திருக்கும் நிலையில், சிவனை மட்டும் வணங்கும் வகையில், வண்டு வடிவம் எடுத்துச் சுற்றி வந்து வழிபடுவார். இதனால் கோபமடைந்த பார்வதி, முனிவரே! சக்தியாகிய என்னை அவமதித்ததால், நீர் சக்தி இழந்து போவீர், எனச் சாபமிட்டார்.

இதையறிந்த சிவன், நானும் சக்தியும் ஒன்றுதான். சக்தியில்லையேல் சிவமில்லை எனக்கூறி உமையவளுக்கு தன் இடப்பாகத்தில் இடம் கொடுத்தார். பார்வதி தேவி இடப்பாகம் பெறுவதற்கு இந்த மலையில் தான் வந்து தவம் புரிந்து கேதார கௌரி விரதம் இருந்து இடப்பாகம் பெற்றார். (இக்கோயிலில் கேதார கௌரி விரதம், புரட்டாசி வளர்பிறை அஷ்டமி திதியில் ஆரம்பித்து 21 நாள் கடைப்பிடிக்கப்படுகிறது).

அப்படி சிவனை நினைத்து தவம் செய்யும் போது சிவபெருமான் லிங்க வடிவமாக வந்து காட்சி தந்து மறைந்தார் பின் அந்த லிங்கத்திலேயே பார்வதியும் கலந்தார். அர்த்தநாரீஸ்வர மூலவருக்கு முன்னால் மரகத லிங்கம் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த லிங்கத்தின் அருமை அறிந்த பிருங்கி முனிவர் மலையில் தனது மூன்று காலால் நடந்தே வந்து லிங்கத்தை தரிசனம் செய்தார்.

தனது மூன்றாம் காலை துறந்து இழந்த சக்தியை பெற்றார். பின் அந்த லிங்கத்தை அங்கேயே நிறுவினார். பின் அந்த லிங்கத்தின் சக்தியை எடுத்துக் கூறி அதை மார்கழி மாதம் மட்டும் எடுத்து அபிஷேகம் செய்து பின் சூரியன் உதயமாவதற்குள் எடுத்து பேழையில் வைத்து விடவேண்டும் என்று தனது சீடர்களுக்கு கட்டளை யிட்டார். மற்ற நேரத்தில் சாதாரணமான லிங்கத்தை வைத்து வழிபடுங்கள் என்று கட்டளையிட்டாராம்.

**கோயில் வரலாறு:**

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயில் திருஞானசம்பந்தரால் தேவாரம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் கொங்கு நாட்டுத் தலங்களில் ஒன்றாகும். மூலவர் அர்த்தநாரீஸ்வரர், தாயார் பாகம்பி ரியாள். செங்கோட்டு வேலவர் என முருகனுக்கு தனி சந்நிதி அமைந்துள்ளது. இத்தலம் அமைந்துள்ள மலையானது ஒரு புறம் பார்க்கும் பொழுது ஆணாக தோற்றமளிக்கிறது. வேறு இடத்தில் பெண் போல தோற்றம் அளிக்கிறது. இத்தலத்தின் தீர்த்தம்- தேவதீர்த்தம் தலமரமாக இலுப்பை மரம் உள்ளது.

**தல வரலாறு:**

மலை சிவந்தநிறமாக இருப்பதால் செங்கோடு என்று பெயர் பெற்றது. தெய்வத்திருமலை, நாகமலை, உரசகிரி எனப் பல பெயர்களும் உள்ளது.

மலையேற உள்ள படிகளில் 60 ஆம் படி மிகச் சிறப்பு வாய்ந்ததாக சொல்லப்படுகிறது. இங்கு நின்று சத்தியம் செய்தால் அது நீதி மன்றத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நிலை இருந்ததாம்.

கேதாரகௌரி, மரகத லிங்கத்தைப் பூசித்து, இறைவனின் பாகத்தைப் பெற்றதாக வரலாறு சொல்லப்படுகிறது.

சம்பந்தர் கொங்கு நாட்டுத் தல யாத்திரையில் முதலில் இப்பதியை வணங்கி, பின்பு சில தலங்களுக்குச் சென்றுவிட்டு திரும்பவும் இங்கு வந்த போது, அவருடன் வந்த அடியார்களை 'நளிர்சுரம்' பற்றி வருத்த 'அவ்வினைக் கிவ்வினை' என்னும் பதிகம் பாடி, 'தீவினைவந்தெம்மைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்' என ஆணையிட்டு அந்நாடு முழுவதும் பிணிதீர்த்தார் என்பது பெரியபுராண வரலாறு.

**இத்தலத்துச் சொல்லப்படும் ஒரு செய்தி:-**

இங்கு வாழ்ந்த குணசீலர் என்ற புலவருக்காகச் செங்கோட்டுவேலர் மாடு மேய்க்கும் சிறுவனாக வந்து குணசீலரின் கடைமாணாக்கர் என்று தன்னைக் கூறிக்கொண்டாராம். பாண்டிப்புலவரேறு என்பவர்; "சமரமுகத் திருச்செங்கோடு சர்ப்பசயிலமெனில் அமரிற்படம் விரித்து ஆடாததென்னே?!" - என்று வியந்து பாடி அதற்குமேல் எழுதமுடியாது திண்டாடினாராம்; அப்போது, சிறுவனாக வந்த வேலவன் "அஃது ஆய்ந்திலையோ நமரன் குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டு உயர்ந்த குமரன் திருமருகன் மயில் வாகனம் கொத்தும் என்றே" - எனப் பாட்டினை முடித்து அப்புலவரைத் திரும்பிப் போகும்படிச் செய்தார் என்ற செய்தி இம்மலையடிவாரத்தில் நிகழ்ந்ததாகுமென்று சொல்லப்படுகிறது.

சிவத்தலமாகயிருப்பினும் இது முருகபெருமானுக்கு மிகவும் உகந்த தலம். மேலமாட வீதியிலிருந்து பார்த்தால் இம்மலை பார்ப்பதற்கு நாகம் போன்றிருப்பதால் நாகாசலம் நாககிரி என்றும் பெயர் உண்டு. கோயிலுக்குச் செல்ல மலைமீது 1200 படிகள் ஏற வேண்டும். படிகட்டுக்களில் பாம்பு உருவங்கள் உள்ளன. ஓரிடத்தில் நீளமான (20 அடி) பாம்பு வாடிவத்திலேயே ஏறும் வழி அமைந்துள்ளது. இத்தலம்

பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரம், தேவாரம், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம் முதலியவைகளில் உள்ளன.

செங்கோட்டு வேலவர் "அழகு மிளிரும்" நின்ற திருவுருவம் இறைவன் வெள்ளை பாஷாணத்தால் ஆன சுயம்பு மூர்த்தி. உளி படாதது விடங்கம் - அடியில் சதுரபீடம். வேளாளக்கவுண்டர் மண்டபத்தூண் ஒன்றில் வீரபத்திரர் உருவமும், மற்றொன்றில் அர்ச்சுனன் தவக்கோலம், வேடன், குருவிக்காரியின் உருவமும் சிற்பக்கலையழகு நிறைந்தவை.

அர்த்தநாரீஸ்வரர் மூலவர் - நின்ற திருமேனி. (இலிங்க வடிவமில்லை) பாதி புடவை - பாதி வேஷ்டி அலங்காரம்; இந்த கோலத்திலேயே (மூலவர்) காட்சி தருகிறார். முழு வடிவமும் வெள்ளைப் பாஷாணத்தால் ஆனது. திருவடியில் கீழ் குளிர்ந்த நீர் சுரக்கின்றது. இது தேவ தீர்த்தம் எனப்படுகின்றது. இத்தீர்த்தம் நாடொறும் வரும் அன்பர்கட்கு வழங்கப்படுவதைப்போல, அமாவாசை நாள்களில் 3, 4 அண்டாக்களில் சேகரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படுகிறது.

மூலவர் முன்னால் மரகத லிங்கமும், பிருங்கி மகரிஷியின் உருவமும் உள்ளது. இங்குள்ள ஆதிகேசவ பெருமாள் சந்நிதி, நம்மாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்டதாகும். வீரகவிராஜபண்டிதரால் பாடப்பட்ட தலபுராணம் உள்ளது. இத்தலத்தில் முதலாம் இராசராசன், சுந்தரபாண்டியத் தேவர், மைசூர்கிருஷ்ணராஜ உடையார் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

அடிவாரத்திலிருந்து சுமார் 650 அடி உயரத்திலுள்ள இம்மலைக்கோயிலுக்குச் செல்லும் பாதை 1200 படிகளைக் கொண்டுள்ளது. கிழ-மேற்கில் 262 அடி நீளமும் தென்-வடலாக 201 அடி நீளமுடையது இக்கோயில். இதன் வடக்கு வாசல் இராஜகோபுரம் கிட்டத்தட்ட 84.5 அடி உயரத்துடன் ஐந்து நிலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு, மேற்கு, தென்திசைகளிலும் இக்கோயிலுக்கு வாயில்களுண்டு. அவற்றுள் தென் திசை வாயிலுக்கு மட்டும் சிறுகோபுரம் உள்ளது.

செங்கோட்டு வேலவர், அர்த்தநாரீசுவரர், ஆதிகேசவப் பெருமாள் என மூன்று தெய்வங்களின் சன்னிதிகள் கொண்டது இக்கோயில். மூலவர் அர்த்தநாரீசுவரர் சன்னிதி மேற்கு நோக்கியுள்ளது. ஆனால் சன்னிதிக்கு முன் வாயில் இல்லை. மாறாக ஒன்பது துவாரங்கள் கொண்ட கல்லாலான பலகணியுள்ளது.

அர்த்தநாரீசுவரர் சன்னிதியின் முன்மண்டபத்தில் ஆமை மண்டபம் ஒன்று உள்ளது. இக்கோயிலின் தூண்கள், மண்டபச் சுவர்களென அனைத்துப் பகுதிகளும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்கோயிலில் செங்கோட்டு வேலவர் சன்னிதியும், அர்த்தநாரீசுவரர் சன்னிதிக்குத் தென்புறம் கிழக்கு நோக்கிய நாரிகணபதி சன்னிதியும், தென்மேற்குப் பகுதியில் வெண்ணிற இலிங்கத்துடன் நாகேசுவரர் சன்னிதியும், தென்புறத்தில் திருமகள், நிலமகள் உடனுறை ஆதிகேசவப் பெருமாள் (நின்ற கோலம்) சன்னிதியும் உள்ளன.

**மேற்கு இராஜகோபுரம்:**

கோவை மாவட்டம் காடாம்பாடி எனும் ஊரில் ஐநூற்றுச் செட்டியார் எனும் இனத்தில் பிறந்த பக்தர் பாததூளி- சுந்தரியம்மாள் தம்பதியினருக்கு மகப்பேறு வாயக்காமல் போக, அவர்கள் திருச்செங்கோடு உமையொருபாகனை வழிபட்டு உமைபாகன் எனும் மகனைப் பெற்றனர். உமைபாகனுக்கு 5 வயது ஆகியும் பேசாமல் ஊமையாக இருந்தமையால், தேரோட்டத்தில் கலந்து கொண்டு தேர்க்காலில் மகனை உருட்டிவிட்டனர். உமைபாகன் மீது தேர் எறிச் சென்றப் பின்பு அவன் பேசத்தொடங்கினான். இந்த அதிசயத்தின் சாட்சியாக அவ்விடத்தில் மடம் நிறுவி தானதருமம் செய்து வந்துள்ளனர். அவர்களது மரபில் பிறந்தவர்கள் ஒன்றினைந்து திருச்செங்கோடு மலைமீது இராஜகோபுரம் அமைத்து தந்துள்ளனர்.

**பாடல் பெற்ற தலம்:**

இத்தலத்தின் இறைவன் அர்த்தநாரீசுவரரை திருஞானசம்பந்தர் முதலாம் திருமுறையின் 107 ஆவது திருப்பதிகத்திலும் திருநீலகண்ட திருப்பதிகம் எனும் 116வது திருப்பதிகத்திலும் பாடியுள்ளார்.

**திருஞானசம்பந்தர் அருளிய திருக்கொடிமாடச்செங்குன்றூர்:**

"வெந்தவெண் ணீறணிந்து விரிநூல்
திகழ்மார்பின் நல்ல
பந்தணவும் விரலாள்
ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார்
அவலம் அறுப்பாரே.
அலைமலி தண்புனலோ டரவஞ்
சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான்
மலையார் இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார்
தடுமாற் றறுப்பாரே.

- திருஞானசம்பந்தர் ●

- இளைய தர்ஷினி

# உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட்!



உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலில், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் ஸ்பெயின் நாடுகள் இடம்பிடித்துள்ளன.

சர்வதேச வான் போக்குவரத்து சங்கம் அளித்த தகவலின்படி, உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் குறித்த பட்டியலை ஹென்லி பாஸ்போர்ட் இண்டெக்ஸ் தயாரித்துள்ளது.

இதில், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் ஸ்பெயின் நாடுகளின் பாஸ்போர்ட் முதலிடம் பிடித்துள்ளது. இதனை பயன்படுத்தி 194 நாடுகளுக்கு விசா இன்றி செல்ல முடியும். கடந்த ஐந்து ஆண்டுகளாக ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் நாடுகள் முதலிடத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு பட்டியலில் ஐரோப்பிய நாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன. பின்லாந்து, சுவீடன் மற்றும் தென் கொரியா நாடுகள் இரண்டாவது இடத்தில் உள்ளன. இந்த நாடுகளின் பாஸ்போர்ட்டை பயன்படுத்தி 193 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்

ஆஸ்திரியா, டென்மார்க், அயர்லாந்து மற்றும் நெதர்லாந்து நாடுகள் 3வது இடத்தில் உள்ளன. இந்த நாடுகளின் பாஸ்போர்ட் மூலம் 192 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்

இந்த பட்டியலில் இந்தியா 80வது இடத்தில் உள்ளது. இந்திய பாஸ்போர்ட் மூலம் 62 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்லலாம். இந்தியாவுடன் 62வது இடத்தை மலேஷியா, இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து நாடுகள் பகிர்ந்து கொண்டுள்ளன.

## இந்தியாவுக்கு எத்தனையாவது இடம்?

நமது அண்டை நாடான பாகிஸ்தான் இந்த பட்டியலில் 101வது இடத்தில் உள்ளது. இந்த பட்டியலில் கடைசி இடத்தில் ஆப்கன் உள்ளது. இதன் பாஸ்போர்ட் மூலம் 29 நாடுகளுக்கும், சிரியா பாஸ்போர்ட்டை பயன்படுத்தி 29 நாடுகளுக்கும், ஈராக் பாஸ்போர்ட்டை பயன்படுத்தி 31 நாடுகளுக்கும், பாகிஸ்தான் பாஸ்போர்ட்டை 34 நாடுகளுக்கும் விசா இல்லாமல் பயணிக்க முடியும்.

- பா.அசோக்குமார்

# சென்னையில் நடைபெறும் 47வது புத்தக கண்காட்சி பெரும் வெற்றி அடையட்டும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து






47ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் 03.01.2023 தொடங்கி வைக்கிறார் என்று தெரிவித்தனர் ஆனால் நந்தனம் YMCA உடற் கல்வியியல் கல்லூரியில் அமைச்சர் உதயநிதி திறந்தது வைத்தார். தவிர்க்க இயலாத காரணங்களால் கண்காட்சியை தொடங்கி வைக்க இயலாததற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருந்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

அனைத்து புகழ்பெற்ற நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பாளர்கள், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடும் இலக்கியம், கலை, அறிவியல், கணிதம், தொழில்நுட்பம், வரலாறு, பொது அறிவு, உணவு, விளையாட்டு, உடல்நலம் போன்ற பல புத்தகங்கள் இங்கு கிடைக்கும். ஒவ்வொரு ஆண்டும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சென்னை புத்தக கண்காட்சிக்கு வந்து பயனடைகின்றனர்.

சென்னையில் நடைபெறும் 47வது புத்தக காட்சி பெரும் வெற்றி அடையட்டும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்திற்கும் முதல்வர் நன்றி தெரிவித்தார். கலைஞர் பொற்கிழி விருது, பபாசி விருதுகளை பெற்ற படைப்பாளிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். தவிர்க்க இயலாத காரணங்களால் கண்காட்சியை தொடங்கி வைக்க இயலாததற்கு வருந்துகிறேன் என்று முதல்வர் கூறியுள்ளார். சென்னை நந்தம்பாக்கத்தில் வர்த்தக மையத்தில் பன்னாட்டு புத்தக கண்காட்சி வரும் 16, 17,18ல் நடைபெறும் என்று தெரிவித்துள்ளனர். வர்த்தக மையத்தில் ரூ.6 கோடி செலவில் பன்னாட்டு புத்தக கண்காட்சி நடைபெற இருக்கிறது.

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் 47-வது சென்னை புத்தகக் காட்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். சுமார் 1000 அரங்குகள் அமைக்கப்பட்டு பல்வேறு பதிப்பகங்களின் புத்தகங்கள் இடம்பெறுகின்றன. புத்தகக் காட்சியை பார்வையிட நுழைவுக் கட்டணமாக ரூ.10 நிர்ணயிக்கபட்டுள்ளது. தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் (பபாசி) சார்பில் ஆண்டுதோறும் சென்னையில் புத்தகக் காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி நடப்பாண்டுக்கான 47-வது சென்னை புத்தகக் காட்சி நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் ஜனவரி 3 தொடங்கி ஜனவரி 21-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த புத்தகக் காட்சி விடுமுறை நாட்களில் காலை 11 முதல் இரவு 8.30 மணி வரையும், வேலை நாட்களில் மதியம் 2 முதல் இரவு 8.30 மணி வரையும் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

- நா வீ சிவசங்கர்



2024 புத்தாண்டை முன்னிட்டு சென்னை மாநகர காவல்துறை எடுத்த சிறப்பான நடவடிக்கையால் 'உயிரிழப்பு இல்லா புத்தாண்டு' வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சிறப்பாக பணியாற்றிய போலீசார் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்களுக்கு போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் பாராட்டு தெரிவித்துள்ளார். பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கையை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் நேரில் ஆய்வு செய்தார். வாகன சோதனை இடங்களையும் கமிஷனர் ஆய்வு செய்து பணிகளை விரைப்படுத்தினார். இதனால் எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டு, விபத்துக்களும் மற்றும் உயிரிழப்பு இல்லா புத்தாண்டாக அமைந்துள்ளது. எனவே 'உயிரிழப்பு இல்லா புத்தாண்டு' என்ற முழக்கத்தை சரியான முறையில் திட்டமிட்டு நடத்திய காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் என பாதுகாப்பு பணியில் இருந்து 18 ஆயிரம் போலீசார் 1500 ஊர்காவலர் படை-யினருக்கு போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

– பா.சரவணன்

# சென்னையில் பத்திரிகையாளர்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமை அமைச்சர்கள் சாமிநாதன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் 21.12.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை மற்றும் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து தினசரி நாளிதழ்கள், செய்தி தொலைக்காட்சிகள் மற்றும் பருவ இதழ்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மைச் செய்தியாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்களுக்கு சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.



இம் மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், சிறுநீரகம், எக்கோ, இ.சி.ஜி. முழு இரத்த பரிசோதனை, காசநோய் கண்டறிதல் போன்ற பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதோடு மட்டுமல்லாது பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, கண் மருத்துவம், பல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம், இருதய மருத்துவம் என்று பல்வேறு வகையான மருத்துவ ஆலோசனைகளும் இங்கே வழங்கப்பட்டது. அந்த வகையில் இந்த மருத்துவ முகாம்கள் மூலம் 150க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் பயனடைந்துள்ளனர்.

– ராதிகா, ஆசிரியர்

# பிரதமர் மோடியின் லட்சத்தீவு தேடல்கள்

## லட்சத்தீவின் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்திற்கு பிரதமர் தலைமை வகித்தார்



லட்சத்தீவில் உள்ள அகத்தி விமான நிலையத்தில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர்,

உயர் அதிகாரிகளே!

**என் குடும்ப உறுப்பினர்களே!**

**வாழ்த்துக்கள்!**

லட்சத்தீவு மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளது. இருப்பினும் சுதந்திரத்திற்குப் பின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, பிராந்தியத்தின் உள்கட்டமைப்பு மட்டுப்படுத்தப்பட்டது. கப்பல் போக்குவரத்து முக்கியத் துறையாக இருந்தபோதும், துறைமுக உள்கட்டமைப்பு வளர்ச்சியடையவில்லை. கல்வி, சுகாதாரம் முதல் பெட்ரோல், டீசல் கிடைப்பது வரை பல்வேறு துறைகளில் சவால்கள் காணப்பட்டன. எங்கள் அரசு இப்போது இந்தப் பிரச்சினைகளைத் தீவிரமாக கவனித்து வருவது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது. லட்சத்தீவின் முதல் பெட்ரோல், எண்ணெய், உயவு எண்ணெய்க்கான மொத்த சேமிப்பு வசதி கவரட்டி, மினிக்காய் தீவுகளில் நிறுவப்பட்டுள்ளது. இதன் விளைவாக,

# வருகைக்கு பிறகு
# ளில் 3,400% உயர்வு

பல துறைகளில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**அன்பான குடும்ப உறுப்பினர்களே,**

கடந்த பத்தாண்டுகளில், அகட்டியில் பல வளர்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக நமது மதிப்புமிக்க மீனவர்களுக்கு நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அகட்டி இப்போது ஒரு விமான நிலையம், ஒரு பனிக்கட்டி ஆலையைக் கொண்டுள்ளது. இது கடல் உணவு ஏற்றுமதி, கடல் உணவு பதப்படுத்தும் துறைகளில் சாத்தியக்கூறுகளைக் கணிசமாக அதிகரிக்கிறது. இதனால் இப்பகுதியில் இருந்து சூரை மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு லட்சத்தீவு மீனவர்களின் வருமானம் அதிகரித்துள்ளது.

**அன்பான குடும்ப உறுப்பினர்களே,**

பிராந்தியத்தின் மின்சாரம், எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, ஒரு பெரிய சூரிய மின் நிலையம், விமான எரிபொருள் கிடங்கு கட்டப்பட்டுள்ளது. இது உங்கள் அனைவருக்கும் கணிசமான நன்மைகளை வழங்குகிறது. அகட்டி தீவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் இப்போது குழாய் மூலம் குடிநீர் கிடைக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அடித்தட்டு மக்களுக்கு வீட்டுவசதி, சுகாதாரம், மின்சாரம், எரிவாயு மற்றும் பிற அத்தியாவசிய வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய அரசு உறுதிபூண்டுள்ளது. அகட்டி உட்பட லட்சத்தீவின் விரிவான வளர்ச்சிக்கு மத்திய அரசு முழு மனதுடன் அர்ப்பணித்துள்ளது.

உங்கள் அன்பான வரவேற்புக்கும், இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் திரண்டதற்கும் மனமார்ந்த நன்றி.

லட்சத்தீவுகள் வழங்கும் மகத்தான சாத்தியக் கூறுகளைக் குறிப்பிட்டதோடு, சுதந்திரத்திற்குப் பிறகு லட்சத்தீவுகள் எதிர்கொண்ட நீண்டகால புறக்கணிப்பையும் சுட்டிக்காட்டினார். கப்பல் போக்குவரத்து இப்பகுதியின் உயிர்நாடியாக இருந்தபோதிலும் பலவீனமான துறைமுக உள்கட்டமைப்பை அவர் குறிப்பிட்டார். இது கல்வி, சுகாதாரம், பெட்ரோல், டீசலுக்கும் பொருந்தும் என்று அவர் கூறினார். தற்போது அரசு அதன் அபிவிருத்திப் பணியை சரியான அக்கறையுடன் மேற்கொண்டுள்ளது என்று அவர் கூறினார். "இந்த சவால்கள் அனைத்தும் எங்கள் அரசால் எதிர்கொள்ளப்படுகின்றன", என்று அவர் கூறினார்.

இன்றைய வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், லட்சத்தீவின் மின்சாரம், பிற எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சூரியசக்தி ஆலை, விமான எரிபொருள் கிடங்கு ஆகியவற்றைத் திறந்து வைத்ததையும் குறிப்பிட்டார். அகத்தி தீவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவது குறித்து தெரிவித்த பிரதமர், ஏழைகளுக்கு வீடுகள், கழிவறைகள், மின்சாரம், சமையல் எரிவாயு ஆகியவற்றை உறுதி செய்வதற்கான அரசின் முயற்சிகளை மீண்டும் சுட்டிக்காட்டினார். "அகத்தி உட்பட லட்சத்தீவின் வளர்ச்சிக்காக மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது" என்று கூறிய திரு மோடி, லட்சத்தீவு மக்களுக்கான கூடுதல் வளர்ச்சித் திட்டங்களுக்காக கவரட்டியில் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்வைக் குறிப்பிட்டு தனது உரையை நிறைவுசெய்தார்.

பிரதமர் நரேந்திர மோடியின் லட்சத்தீவு பயணம் இயற்கை எழில் கொஞ்சும் தீவுகளில் சுற்றுலாவுக்கு ஊக்கம் அளித்துள்ளது என்று மேக்மைட்ரிப் தெரிவித்துள்ளது. யூனியன் பிரதேசத்திற்கான பிளாட்ஃபார்ம் தேடலில் 3,400 சதவீதம் அதிகரித்து வருவதாக ஆன்லைன் டிராவல் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

– நா வீ சிவசங்கர்

# ஒரு நல்ல மனிதரை
# ஊடகங்கள் திட்டமிட்டு ஒழித்துக்கட்டியதா?

**பிறப்பும் பின்னணியும்:**

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952-ம் ஆண்டு, ஆகஸ்டு 25-ம் தேதி அழகர்சாமி - ஆண்டாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் விஜயராஜ் என்கிற விஜயகாந்த். இவரின் மனைவி பிரேமலதா. இவர்களுக்கு விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் என இரண்டு மகன்கள் இருக்கிறார்கள்.

**வராத படிப்பும்... வந்த நடிப்பும்:**

சிறு வயது முதலே சினிமாமீது இருந்த பிடிப்பின் காரணமாக, பல பள்ளிகள் மாறியும் அவரால் பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்தது. அதேநேரம் தான் விரும்பிப் பார்க்கும் எம்.ஜி.ஆரின் படங்களை சீன் பை சீனாகத் தன் நண்பர்களிடம் விவரிக்கும் அளவுக்கு சினிமா மீது அவருக்கு ஆர்வம் இருந்தது. படிப்பை நிறுத்திய பிறகு கீரைத்துரையில் இருக்கும் தன் தந்தையின் அரிசி ஆலையில் பணிபுரிந்தார்.

**விஜயராஜ் டு விஜயகாந்த்**

தனது நண்பர்களின் உந்துதலின் பெயரிலும், தனக்கிருந்த ஆர்வத்தாலும் சினிமாவில் நடிப்பது என முடிவுசெய்து சென்னைக்கு வந்தார். பல்வேறு அவமானங்கள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில், 1979-ம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான 'இனிக்கும் இளமை' படத்தில் நடித்து, தன் திரைப்பயணத்தைத் தொடங்கினார்.

விஜயராஜ் என்ற தன் பெயரை விஜயகாந்த் என மாற்றிக்கொண்டார். 'சட்டம் ஒரு இருட்டறை', 'தூரத்து இடிமுழக்கம்', 'அம்மன்கோவில் கிழக்காலே', 'உழவன் மகன்', 'சிவப்பு மல்லி' என வெற்றிப் படங்களைக் கொடுத்து தமிழின் முன்னணிக் கதாநாயகனாக வலம்வந்தார். கிட்டத்தட்ட 150-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த விஜயகாந்த், 1984-ல் மட்டும் ஒரே ஆண்டில் 18 படங்களில் நடித்து சினிமாத்துறையில் வரலாற்றுச் சாதனை புரிந்தார்.

**நடிகர் டு நடிகர் சங்கத் தலைவர்**

1999-ம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் விஜயகாந்த். பல



ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்கக் கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திரக் கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார். மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்வதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து, பெரும் தொகையை வங்கியில் டெபாசிட் செய்தார்.

'தென்னிந்திய, அகில இந்திய' என்றிருந்த தனது ரசிகர் மன்றத்தின் பெயரை 1982-ல் 'தமிழ்நாடு விஜயகாந்த் தலைமை ரசிகர் மன்றம்' எனவும் பெயர் மாற்றம் செய்தார்.

**ரசிகர் மன்றம் டு அரசியல் கட்சி**

2000-ம் ஆண்டு, பிப்ரவரி 12-ல் தனது ரசிகர் மன்றத்துக்கென தனிக்கொடியை அறிமுகப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, 2001-ம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் பல்வேறு இடங்களில் சுயேச்சையாகப் போட்டியிட்டு, பலர் வெற்றியும் அடைந்தனர். 2002-ல் 'ராஜ்ஜியம்' படத்திலிருந்து அரசியல் குறித்த வசனங்கள் அவரின் படங்களில் பட்டாசாக வெடிக்கத் தொடங்கின. அப்படி, விஜயகாந்தின் இந்த அரசியல் நகர்வுகளைப் புரிந்துகொண்டதாலேயே ஆளும் அரசியல் கட்சிகள் அவருக்குப் பல நெருக்கடிகளைக் கொடுத்துவந்தன. அதேவேளையில், அரசியலுக்கு வர, சரியான களத்துக்காக, காரணத்துக்காகக்



காத்துக்கொண்டிருந்தார் விஜயகாந்த். கள்ளக்குறிச்சியில் தன் ரசிகர் மன்ற நிர்வாகி ஒருவரின் திருமணவிழாவில் விஜயகாந்த் வருகையை முன்னிட்டு கட்டப்பட்ட மன்றக் கொடிக்கம்பங்களை பா.ம.க-வினர் வெட்டிச் சாய்த்ததாகச் சொல்லப்பட்டது.

தொடர்ந்து, நடந்த திருமண நிகழ்வில் ராமதாஸையும், அவரின் மகன் அன்புமணி ராமதாஸையும் விஜயகாந்த் விமர்சிக்க, பதிலுக்கு விஜயகாந்தை ராமதாஸ் விமர்சிக்க, ராமதாஸ் - விஜயகாந்த் மோதல், பா.ம.க தொண்டர்கள் - விஜயகாந்த் ரசிகர்கள் என விரிவடையத் தொடங்கியது. விஜயகாந்த் நடித்த 'கஜேந்திரா' படத்துக்கு ராமதாஸால் சிக்கல் எழுந்தது. விஜயகாந்தைக் கடுமையாக விமர்சித்து வட மாவட்டங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

ஊர் ஊராகச் சென்று தன் ரசிகர் மன்ற நிர்வாகிகளைச் சந்திக்க ஆரம்பித்தார். சென்ற இடங்களிலெல்லாம் விஜயகாந்துக்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. விஜயகாந்தைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது. திருவண்ணாமலையில் கட்சி அறிவிப்பு, ஈரோட்டில் கட்சி தொடங்கும் தேதி, மாநாடு அறிவிப்பு என அதிரடிகாட்டத் தொடங்கினார் விஜயகாந்த். அந்தநேரத்தில் கோயம்பேடு மேம்பால விரிவாக்கத்துக்காக விஜயகாந்தின் மண்டபம் கையகப்படுத்தவிருப்பதாகத் தேசிய நெடுஞ் சாலைத்துறையிடமிருந்து விஜயகாந்துக்கு நோட்டீஸ் பறந்தது. இந்தநிலையில், 2005-ம் ஆண்டு, செப்டம்பர் 14-ம் தேதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி, "தேசிய முற்போக்கு திராவிட கழகம்" எனும் அரசியல் கட்சியைத் தொடங்கினார் விஜயகாந்த்.

### சட்டமன்ற உறுப்பினராக

கட்சி ஆரம்பித்து ஓராண்டு நிறைவடையாத நிலையில், 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர், பா.ம.க-வின் கோட்டையான விருத்தாசலம் தொகுதியில் அமோக வெற்றிபெற்றார். மற்ற வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் கணிசமான வாக்குகளைப் பெற்று, தே.மு.தி.க-வுக்கு 8.4 சதவிகித வாக்குகளைப் பெற்றுத்தந்தனர். அதைத் தொடர்ந்து, 2009-ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் தனித்து நின்று, தோல்வியைத் தழுவினாலும் 10 சதவிகித வாக்குகளை தே.மு.தி.க பெற்றது.

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக

தனித்தே போட்டியிட்டுவந்த விஜயகாந்த், முதன்முறையாக 2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தார். 41 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க., 29 இடங்களில் வெற்றிபெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது. ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற விஜயகாந்த் முதன்முறையாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார்.

### முதல்வர் வேட்பாளராக

2011-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து நடைபெற்ற முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விஜயகாந்துக்கும் ஜெயலலிதாவுக்கும் மோதல் ஏற்பட்டு, அ.தி.மு.க-தே.மு.தி.க கூட்டணி முறிந்தது. 2014-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்று தேர்தலைச் சந்தித்த தே.மு.தி.க., போட்டியிட்ட 14 தொகுதிகளிலும் படுதோல்வியடைந்தது.

2016-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க., வி.சி.க., த.மா.கா., கம்யூனிஸ்ட் கட்சிகள் அங்கம்வகித்த மக்கள் நலக்கூட்டணியில்

இணைந்து, முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தேர்தலைச் சந்தித்தார் விஜயகாந்த். ஆனால், தேர்தல் முடிவில் ம.ந.கூட்டணி உட்பட தே.மு.தி.க-வும் போட்டியிட்ட 104 தொகுதியிலும் படுதோல்வியடைந்தது. உளுந்தூர்பேட்டையில் போட்டியிட்ட விஜயாகாந்த் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு டெபாசிட் இழந்தார். 2019-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணியில் இடம்பெற்று நான்கு தொகுதியில் மட்டுமே போட்டியிட்ட தே.மு.தி.க அனைத்திலும் படுதோல்வியடைந்தது.

### சரிந்த செல்வாக்கு

தனித்துப் போட்டியிட்டபோது 8.4%, 10% ஆக இருந்த தே.மு.தி.க-வின் வாக்குவங்கி, கூட்டணிக்குச் சென்ற பின்னர் 7.9%, 6.1% எனக் குறைந்து 2016 சட்டமன்றத் தேர்தலில் 2.4% ஆகச் சரிந்தது. நிர்வாகிகள் பலர் அ.தி.மு.க-வுக்கும் தி.மு.க-வுக்கும் சென்றனர். போதாக்குறைக்கு விஜயகாந்தின் உடல்நிலையும் மோசமடைந்தது. தொடர்ந்து, 2021 சட்டமன்றத் தேர்தலில் அ.ம.மு.க-வுடன், தே.மு.தி.க கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்து படுதோல்வி அடைந்தது.

### சறுக்கிய விமர்சனங்கள்:

‘2016-ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் வென்று, ஆட்சியமைக்க அ.தி.மு.க.விற்கு வாய்ப்புள்ளதா?’ என்பது செய்தியாளர்களின் கேள்வி. ‘நிச்சயம் வாய்ப்பில்லை’ என்பது வலுவான எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்தின் பதில். கேள்வியில் எந்தத் தவறும் இல்லை. அது கேட்கப்பட வேண்டிய கேள்விதான். அதற்கு விஜயகாந்த் சொன்ன பதிலும் தொடக்கத்தில் தவறாக வெளிப்படவில்லை. ஆனால், பதிலின் நீட்சியாக தொடர்ந்த வார்த்தைகள், ‘இதே கேள்வியை ஜெயலலிதாவிடம் போய்க் கேட்பீர்களா? செய்தியாளர்களா நீங்கள்? த்தூ..’ என்று துப்பியது இப்படி இவர் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் பல. அதனாலேயே தமிழக ஊடகங்கள் இவரை ரவுண்டு கட்டி அடித்தன. துர்பிரசாரங்கள் மூலம் விஜயகாந்தை ஒழித்துக் கட்டும் வேலையில் வெற்றி பெற்றன. இருப்பினும், தனிப்பட்ட முறையில் அனைவராலும் நேசிக்கக்கூடிய மனிதராகவே திகழ்ந்தார் விஜயகாந்த்.

### வாழ்க்கையை பள்ளிப் பாடத்தில் சேர்க்க வேண்டும்

விஜயகாந்த் நல்ல நிலையில் இருந்திருந்தால், இன்று ஏழைகள் படும் கஷ்டங்கள் அவர்களுக்கு



இருந்திருக்காது; எழுத்தாளர் அனுபரமி

விஜயகாந்த் எவ்வளவோ நல்லது செய்த நிலையிலும், இன்று சமூக ஊடகங்களில் ட்ரோல் செய்யப்பட்டு வருவது வருத்தத்திற்கு உரியது என எழுத்தாளர் அனுபரமி கூறியுள்ளார்.

தனியார் யூடியூப் சேனலுக்கு பேட்டி அளித்த நடிகையும் எழுத்தாளருமான அனுபரமி, விஜயகாந்த் தனது மண்டபத்தில் தினமும் சாப்பாடு போட்டவர். நான் ஆரம்பகட்டத்தில் திரை துறைக்கு வந்து, சாப்பிட கஷ்டப்பட்டப்போது, அவரது மண்டபத்தில் சென்றுதான் சாப்பிட்டேன்.

விஜய்காந்த் திரைதுறையினர் மற்றும் பொதுமக்களுக்கு அவ்வளவு நன்மைகளை செய்துள்ளார். அவரை சமூக ஊடகங்களில் ட்ரோல் செய்வது வருத்தத்திற்குரியது. இதற்கு காரணமே இந்த சமூகம் தான். கலைஞர், ஜெயலலிதா என்ற இருபெரும் ஆளுமைகளை எதிர்த்து நின்றவர் விஜயகாந்த்.

பெரிய நடிகராக இருந்தாலும் நல்ல மனசுக்காரர், ஈகோ இல்லாதவர். அவரை பிடிக்காதவர்கள் யாரும் இல்லை. அவர் இருபெரும் கட்சிகளை எதிர்த்த பின்னரே, அவரை சிலருக்கு பிடிக்காமல் போனது. தன்னை தாழ்த்திக்கிட்டு மக்களுக்கு நல்லது செய்யணும் என நினைத்தவர் விஜயகாந்த். ஆனால் அவரை வளரவிடவில்லை.

விஜயகாந்த் நல்ல நிலையில் இருந்திருந்தால், இன்று ஏழைகள் படும் கஷ்டங்கள் அவர்களுக்கு இருந்திருக்காது. சிறந்த மனிதருக்கு இலக்கணமாக இருந்தவர் விஜயகாந்த். அவரது வாழ்க்கையை பள்ளிப் பாடத்தில் சேர்க்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

– நா வீ சிவசங்கர்

# புதிய பாய்ச்சலுடன் புத்தாண்டை தொடங்கிய இந்தியா!




2024ம் ஆண்டின் முதல் செயற்கைகோளான 'எக்ஸ்போசாட்'டை சுமந்தபடி பி.எஸ். எல்.வி சி-58 ராக்கெட் விண்ணில் பாய்ந்தது. 2023ம் ஆண்டு இஸ்ரோ தொடர்ச்சியாக பல சாதனைகளை செய்துள்ளது. குறிப்பாக நிலவின் தென் துருவத்தை ஆராயும் வகையில் சந்திரயான் 3 விண்கலத்தை விண்ணில் செலுத்தி உலக நாடுகளை உற்று நோக்கச் செய்தது. அதற்கு அடுத்தபடியாக சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா எல்1 விண்கலம் வெற்றிகரமாக இஸ்ரோ தரப்பில் ஏவப்பட்டது. இதை தவிர வெளிநாட்டு பி.எஸ்.எல்.வி ராக்கெட்களை வெற்றிகரமாக ஏவ இஸ்ரோ உதவியாக இருந்துள்ளது. இந்த நிலையில் தற்போது 60வது பி.எஸ்.எல்.வி ராக்கெட் விண்ணில் ஏவ தயாராகிவிட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து இன்று காலை 9.10 மணிக்கு பி.எஸ்.எல்.வி சி-58 என்ற ராக்கெட் 'எக்ஸ்போசாட்' என்ற செயற்கைகோளை சுமந்தபடி விண்ணில் செலுத்தப்பட்டது. 5 ஆண்டுகள் ஆயுட்காலத்தை கொண்ட இந்த செயற்கைக்கோள் 650 கி.மீட்டர் வட்டமான பூமியின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது. மேலும், இந்த செயற்கைகோள் எக்ஸ்ரே மூலங்களின் தற்காலிக நிலை, நிறமாலை போன்ற அறிவியல் ஆய்வுகளையும், விண்வெளியில் உள்ள தூசு, கருந்துகள், வாயுக்களின் மேகக்கூட்டமான 'நெபுலா' உள்ளிட்டவற்றையும் ஆராய உள்ளது.



இதுமட்டுமின்றி, திருவனந்தபுரம் லால் பகதூர் சாஸ்திரி பல்கலைக்கழக மாணவிகள் பூமியின் மேல் பரப்பில் உள்ள புற ஊதா கதிர்கள் மற்றும் கேரள மாநிலத்தின் தட்ப வெப்ப நிலையை அறிந்து கொள்வதற்கான 'வெசாட்' என்ற செயற்கைக்கோளை வடிவமைத்திருந்தனர். அந்த வகையில் பெண்களின் மேற்பார்வையில் முழுமையாக வடிவமைக்கப்பட்ட நாட்டின் முதல் செயற்கைக்கோளுடன், மேலும் வெளிநாடுகளை சேர்ந்த 10 பேலோட்ஸ் (payloads) உடன் இந்த ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது. இதனை அடுத்து, இந்த எக்ஸ்போசாட் செயற்கைகோள்தான் 2024ம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்படும் முதல் செயற்கைகோள் ஆகும்.

- ம.திலிப்குமார்

# "எப்போதெல்லாம் தமிழ்நாடு வருகிறேனோ, அப்போதெல்லாம் எனக்குள் ஒரு புதிய சக்தியை நிரப்பிக் கொண்டு செல்கிறேன்"

## திருச்சி பட்டமளிப்பு விழாவில் பிரதமர் மோடி




பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியில் ரூ.20,000 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து, வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். தமிழகத்தில் ரயில், சாலை, எண்ணெய் மற்றும் எரிவாயு, கப்பல் துறை போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

அனைவருக்கும் பயனுள்ள மற்றும் வளமான புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்த பிரதமர், 2024-ம் ஆண்டில் தனது முதல் பொது நிகழ்ச்சி தமிழகத்தில் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். ரூ.20,000 கோடிக்கும் அதிகமான இன்றைய திட்டங்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை வலுப்படுத்தும் என்று கூறிய அவர், சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், விமான நிலையங்கள், எரிசக்தி மற்றும் பெட்ரோலிய குழாய்கள் போன்ற துறைகளின் திட்டங்களுக்காக மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். இந்தத் திட்டங்களில் பல சுற்றுலாவை ஊக்குவிப்பதுடன், மாநிலத்தில் ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று அவர் கூறினார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கடந்த மூன்று வாரங்களாக பெய்த கன மழையால் பலர் உயிர் இழந்ததையும், கணிசமான சொத்து இழப்புகளையும் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவித்ததுடன், தமிழக மக்களுக்கு மத்திய அரசு துணை நிற்கும் என்றும் கூறினார். தமிழக அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறோம் என்றார் அவர்.

சமீபத்தில் மறைந்த திரு.விஜயகாந்துக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர் மோடி, "அவர் சினிமா துறையில் மட்டுமல்ல, அரசியலிலும் ஒரு 'கேப்டன்' என்று கூறினார். தனது படைப்புகள் மற்றும் திரைப்படங்களின் மூலம் மக்களின் இதயங்களை வென்று, எல்லாவற்றிற்கும் மேலாக தேச நலனை அவர் கொண்டிருந்தார் என அவர் கூறினார். மேலும், நாட்டின் உணவுப் பாதுகாப்பில் முக்கிய பங்காற்றிய டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனின் பங்களிப்புகளை நினைவு கூர்ந்த அவர், மறைந்த அவரது ஆன்மாவுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அடுத்த 25 ஆண்டுகளுக்கு விடுதலையின் அமிர்தப் பெருவிழா, இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதில் முக்கியப் பங்கு வகிக்கும் என்று பிரதமர் மீண்டும் குறிப்பிட்டார். வளர்ச்சியடைந்த பாரதம் என்று வரும்போது பொருளாதார மற்றும் கலாச்சார அம்சங்களைப் பற்றி அவர் கூறினார். ஏனெனில் தமிழ்நாடு இந்தியாவின் செழிப்பு மற்றும் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாகும் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். தொன்மையான தமிழ் மொழியின் தாயகம் தமிழ்நாடு, அது பண்பாட்டு பாரம்பரியத்தின் பொக்கிஷம் என்று கூறிய பிரதமர், அற்புதமான இலக்கியங்களை உருவாக்கிய திருவள்ளுவர் மற்றும் சுப்பிரமணிய பாரதி ஆகியோரை நினைவுகூர்ந்தார். சி.வி.ராமன் போன்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிஞர்கள் மற்றும் பிற விஞ்ஞானிகளின் தாயகமாக தமிழகம் திகழ்வதாகவும், தாம் மாநிலத்திற்கு வரும் போதெல்லாம் தமக்கு அது புதிய ஆற்றலை ஊட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திருச்சிராப்பள்ளியின் வளமான பாரம்பரியத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் மோடி, பல்லவர், சோழர், பாண்டியர் மற்றும்

நாயக்கர் வம்சங்களின் நல்லாட்சி மாதிரிகளின் மிச்சங்களை இங்கே காண்பதாகக் கூறினார். தனது வெளிநாட்டுப் பயணங்களின் போது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி குறிப்பிடுவதாக அவர் கூறினார். "நாட்டின் வளர்ச்சி மற்றும் பாரம்பரியத்தில் தமிழ் கலாச்சார உத்வேகத்தின் பங்களிப்பு தொடர்ந்து விரிவடைவதாக நான் நம்புகிறேன்", என்று அவர் கூறினார். புதிய நாடாளுமன்றம், காசித் தமிழ், காசி சௌராஷ்டிர சங்கமம், புனிதமான செங்கோல் நிறுவப்பட்ட முயற்சிகள் நாடு முழுவதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதான ஆர்வத்தை அதிகரிக்க வழிவகுத்த முயற்சிகள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 10 ஆண்டுகளில் சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், விமான நிலையங்கள், ஏழைகளுக்கான வீடுகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற துறைகளில் இந்தியாவின் மிகப்பெரிய முதலீடுகள் குறித்து பிரதமர் தெரிவித்தார். உலகின் முதல் 5 பொருளாதாரங்களில் இந்தியா இடம்பிடித்துள்ளது, இது உலகிற்கு ஒரு நம்பிக்கை ஒளியாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். உலகெங்கிலும் இருந்து இந்தியாவிற்கு வரும் பெரும் முதலீடுகளைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், மேக் இன் இந்தியாவின் முதன்மை வணிகத் தூதுவராக தமிழகம் மாறியுள்ளதால் அதன் நேரடி நன்மைகளை தமிழ்நாடும் அதன் மக்களும் பெற்று வருவதாகக் கூறினார்.

"எப்போதெல்லாம் தமிழ்நாடு வருகிறேனோ, அப்போதெல்லாம் எனக்குள் ஒரு புதிய சக்தியை நிரப்பிக் கொண்டு செல்கிறேன்" "சங்க காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முறைதான் தற்போதும் கல்வித்துறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பட்டமளிப்பு, தமிழ்நாட்டுக்கு பழம்பெரும் பாரம்பரியத்தைக் கொண்டது. சங்க காலத்தில் புலவர்கள் இயற்றிய செய்யுள்கள், பாடல்கள் அரசர்களால் ஏற்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. ஆய்வுக்குப் பிறகு பாடல்கள் இயற்றிய புலவர்கள் இலக்கியவாதிகளாக அங்கீகரிக்கப்பட்டனர். சங்க காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முறைதான் தற்போதும் கல்வித்துறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பட்டம் பெறுவதுடன் கற்றல் முடிவதில்லை. இந்தியாவை உலக நாடுகள் வியப்போடு பார்க்கிறது. பல்கலை கழகங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி. மாணவர்கள் புதியதோர் உலகை படைக்க எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

நாட்டின் வளர்ச்சியை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்ல இதுவே அடிப்படை. எனக்கு ஏராளமான தமிழ் நண்பர்கள் உண்டு. அவர்களிடமிருந்து தமிழ் கலாசாராத்தை நான் கற்றுக் கொள்கிறேன். நான் எங்கு சென்றாலும் தமிழ்நாட்டின் கலாசாரம் குறித்து பேச மறப்பதில்லை. எனக்கு தமிழ் மொழி, தமிழ் கலாசாரம் குறித்து உற்சாகம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

மாநிலத்தின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியில் பிரதிபலிக்கும் என்ற அரசின் அணுகுமுறையைப் பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார். மத்திய அரசின் 40-க்கும் மேற்பட்ட மத்திய அமைச்சர்கள் கடந்த ஓராண்டில் 400-க்கும் மேற்பட்ட முறை தமிழகம் வந்துள்ளனர். "தமிழ்நாட்டின் முன்னேற்றத்தால் இந்தியா முன்னேறும்" என்று குறிப்பிட்ட திரு. மோடி, இணைப்பு என்பது தொழில்களுக்கு ஊக்கமளிக்கும், மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வளர்ச்சிக்கான ஊடகம் என்று குறிப்பிட்டார். இன்றைய திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டிடத்தைப் பற்றிக் குறிப்பிட்டார், இது திறனை மூன்று மடங்கு அதிகரிக்கும். கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் உலகின் பிற பகுதிகளுடனான இணைப்பை வலுப்படுத்தும். புதிய முனையக் கட்டிடத்தின் திறப்பு விழா முதலீடுகள், வணிகங்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் சுற்றுலாவுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்று அவர் குறிப்பிட்டார். உயர்த்தப்பட்ட சாலை மூலம் விமான நிலையத்தை தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைப்பதை அதிகரித்ததையும் அவர் குறிப்பிட்டார். திருச்சி விமான நிலையம் அதன் உள்கட்டமைப்புடன் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தும் என்று அவர் திருப்தி தெரிவித்தார்.

ஐந்து புதிய ரயில்வே திட்டங்களைக் குறிப்பிட்ட பிரதமர் மோடி, அவை தொழில் மற்றும் மின்சார உற்பத்தியை ஊக்குவிக்கும் என்று கூறினார். ஸ்ரீரங்கம், சிதம்பரம், ராமேஸ்வரம் மற்றும் வேலூர் போன்ற முக்கிய நம்பிக்கை மற்றும் சுற்றுலா மையங்களை இணைக்கும் வகையில் இந்த புதிய சாலைத் திட்டங்கள் அமையும்.

கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசின் துறைமுகம் சார்ந்த வளர்ச்சிப் பணிகள் குறித்துப் பேசிய பிரதமர், கடலோரப் பகுதிகளையும் மீனவர்களின் வாழ்க்கையையும் மாற்றுவதற்கான திட்டங்களைக் குறிப்பிட்டார். மீன்வளத்துறைக்கு தனி அமைச்சகம் மற்றும் பட்ஜெட், மீனவர்களுக்கான வேளாண் கடன் அட்டை, ஆழ்கடல் மீன்பிடிப்புக்கான படகு நவீனமயமாக்கலுக்கான உதவி மற்றும் பிரதமர் மத்ஸ்ய சம்படா திட்டம் ஆகியவற்றை அவர் பட்டியலிட்டார்.

சாகர்மாலா திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், நாட்டில் உள்ள துறைமுகங்கள் சிறந்த சாலைகளுடன் இணைக்கப் பட்டுள்ளன என்று தெரிவித்தார். துறைமுகத்தின் திறன் மற்றும் கப்பல்களின் செயல்திறன் கணிசமாக மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார், ஏனெனில் காமராஜர் துறைமுகத்தின் திறன் இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். காமராஜர் துறைமுகத்தின் பொது சரக்கு நிறுத்துமிடம்-2 திறப்பு விழா, தமிழ்நாட்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை, குறிப்பாக ஆட்டோ மொபைல் துறையை வலுப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், அணு உலை மற்றும் எரிவாயு குழாய்கள் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குவது குறித்தும் அவர் பேசினார்.

தமிழகத்திற்கு மத்திய அரசு செய்த வரலாறு காணாத செலவு குறித்து பிரதமர் தெரிவித்தார். 2014-க்கு முந்தைய பத்தாண்டுகளில் மாநிலங்களுக்கு ரூ.30 லட்சம் கோடியும், கடந்த 10 ஆண்டுகளில் மாநிலங்களுக்கு ரூ.120 லட்சம் கோடியும் வழங்கப்பட்டது. கடந்த 2014-ம் ஆண்டுக்கு முந்தைய 10 ஆண்டுகளை விட இந்த காலகட்டத்தில் தமிழகத்திற்கும் 2.5 மடங்கு கூடுதல் நிதி கிடைத்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக, மாநிலத்தில் மூன்று மடங்கும், ரயில்வே துறையில் 2.5 மடங்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. மாநிலத்தில் லட்சக்கணக்கான குடும்பங்கள் இலவச ரேஷன், மருத்துவ சிகிச்சை மற்றும் பட்டா வீடுகள், கழிப்பறைகள் மற்றும் குழாய் நீர் போன்ற வசதிகளைப் பெற்று வருகின்றன.

வளர்ச்சியடைந்த பாரதத்தின் இலக்குகளை அடைய அனைவரின் முயற்சியும் அவசியம் எனக் குறிப்பிட்ட பிரதமர், இளைஞர்கள் மற்றும் தமிழக மக்களின் திறமை மீது நம்பிக்கை உள்ளது, தமிழக இளைஞர்களிடையே ஒரு புதிய நம்பிக்கை உருவாவதை என்னால் பார்க்க முடிகிறது என்று கூறினார். இந்த நம்பிக்கை வளர்ச்சியடைந்த பாரதத்தின் சக்தியாக மாறும் என்று கூறி, பிரதமர் தமது உரையை நிறைவு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு ஆர்.என்.ரவி, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியில், திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையத்தில் புதிய முனையக் கட்டிடத்தை பிரதமர் திறந்து வைத்தார். ரூ.1100 கோடிக்கும் அதிகமான செலவில் உருவாக்கப்பட்ட இரண்டு அடுக்கு புதிய சர்வதேச முனைய கட்டிடம் ஆண்டுதோறும் 44 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகளுக்கும், நெரிசல் நேரங்களில் சுமார் 3500 பயணிகளுக்கும் சேவை செய்யும். புதிய முனையத்தில் பயணிகளின் வசதிக்காக அதிநவீன வசதிகள் மற்றும் அம்சங்கள் உள்ளன.

பல்வேறு ரயில்வே திட்டங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். சேலம் - மேக்னசைட் சந்திப்பு - ஓமலூர் - மேட்டூர் அணைப் பிரிவு, 41.4 கி.மீ., தூரத்துக்கு இரட்டைப் பாதை அமைக்கும் திட்டமும் இதில் அடங்கும்; மதுரை - தூத்துக்குடி இடையே 160 கி.மீ., தூரத்திற்கு இரட்டை ரயில் பாதை அமைக்கும் திட்டம்; திருச்சிராப்பள்ளி - மானாமதுரை - விருதுநகர்; விருதுநகர் - தென்காசி சந்திப்பு; செங்கோட்டை - தென்காசி சந்திப்பு - திருநெல்வேலி - திருச்செந்தூர் ஆகிய ரயில் பாதை மின்மயமாக்கலுக்கான மூன்று திட்டங்கள் இதில் அடங்கும்; சரக்கு மற்றும் பயணிகளை ஏற்றிச் செல்லும் ரயில் திறனை மேம்படுத்தவும், தமிழகத்தில் பொருளாதார மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இந்த ரயில் திட்டங்கள் உதவும்.

ஐந்து சாலைத் துறை திட்டங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். தேசிய நெடுஞ்சாலை 81-ன் திருச்சி - கல்லகம் பிரிவுக்கு 39 கி.மீ நான்கு வழிச்சாலை; தேசிய நெடுஞ்சாலை 81-ன் கல்லகம் - மீன்சுருட்டி பிரிவின் 60 கி.மீ நீளத்திற்கு 4/2 வழிச்சாலை; தேசிய நெடுஞ்சாலை 785-ன் செட்டிகுளம் - நத்தம் பிரிவின் 29 கி.மீ நான்கு வழிச்சாலை; தேசிய நெடுஞ்சாலை 536-ன் காரைக்குடி - ராமநாதபுரம் பிரிவில் 80 கி.மீ; தேசிய நெடுஞ் சாலை 179ஏ சேலம் - திருப்பத்தூர் - வாணியம்பாடி சாலையின் 44 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக மாற்றப்படும் ஆகியவை இதில் அடக்கம். திருச்சி, ஸ்ரீரங்கம், சிதம்பரம், ராமேஸ்வரம், தனுஷ்கோடி, உத்திரகோசமங்கை, தேவிபட்டினம், ஏர்வாடி, மதுரை போன்ற தொழில் மற்றும் வணிக மையங்களின் இணைப்பை மேம்படுத்துவதற்கும் இந்த சாலைத் திட்டங்கள் உதவும்.

இந்த நிகழ்ச்சியின் போது முக்கியமான சாலை மேம்பாட்டு திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார். தேசிய நெடுஞ் சாலை 332ஏ-வின் முகையூர் முதல் மரக்காணம் வரை 31 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலை அமைக்கும் பணியும் இதில் அடங்கும். இந்தச் சாலை தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரையில் உள்ள துறைமுகங்களை இணைக்கும், உலக பாரம்பரிய தளமான மாமல்லபுரத்திற்கு சாலை இணைப்பை மேம்படுத்தும் மற்றும் கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு சிறந்த இணைப்பை வழங்கும். காமராஜர் துறைமுகத்தின் பொது சரக்கு கப்பல் நிறுத்துமிடம்-2-ஐ (ஆட்டோமொபைல் ஏற்றுமதி/ இறக்குமதி முனையம்-2 மற்றும் மூலதன தூர்வாருதல் கட்டம்-5) பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். பொது சரக்கு கப்பல் நிறுத்துமிடம் -2 திறப்பு நாட்டின் வர்த்தகத்தை



வலுப்படுத்துவதற்கான ஒரு படியாகும், இது பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை அதிகரிக்க உதவும்.

இந்த நிகழ்ச்சியின் போது, பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்ததோடு, ரூ .9000 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள முக்கியமான பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் ஐபி 101 (செங்கல்பட்டு) முதல் எண்ணூர் - திருவள்ளூர் - பெங்களூரு - புதுச்சேரி - நாகப்பட்டினம் - மதுரை - தூத்துக்குடி பைப்லைன் வரை 488 கி.மீ நீளமுள்ள இயற்கை எரிவாயு குழாய் திட்டம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் 697 கி.மீ நீளமுள்ள விஜயவாடா-தருமபுரி மல்டிபிராடக்ட் பெட்ரோலிய பைப்லைன் (வி.டி.பி.எல்) ஆகியவை நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இரண்டு திட்டங்களில் அடங்கும்.

மேலும், இந்திய எரிவாயு ஆணையத்தால் (கெயில்) கொச்சி-கூத்தநாடு-பெங்களூர்-மங்களூர் எரிவாயுக் குழாய் திட்டம் 2-ன் கீழ் கிருஷ்ணகிரி முதல் கோயம்புத்தூர் பிரிவு வரை 323 கி.மீ இயற்கை எரிவாயுக் குழாய் அமைக்கும் திட்டம் மற்றும் சென்னை வல்லூரில் உத்தேசிக்கப்பட்டுள்ள தரைவழி முனையத்திற்கான பொது வழித்தடத்தில் பிஓஎல் குழாய்கள் அமைத்தல் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறையின் இந்தத் திட்டங்கள் பிராந்தியத்தின் எரிசக்தியின் தொழில்துறை, உள்நாட்டு மற்றும் வணிக தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு படியாகும். இவை இப்பகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்கவும் வழிவகுக்கும்.

கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் (ஐ.ஜி.சி.ஏ.ஆர்) விரைவு அணு உலை எரிபொருள் மறுசுழற்சி நிலையத்தையும் (டி.எஃப்.ஆர்.பி) பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். ரூ.400 கோடி செலவில் உருவாக்கப்பட்ட டி.எஃப். ஆர்.பி ஒரு தனித்துவமான வடிவமைப்பைக் கொண்டுள்ளது. இதுபோன்று, உலகில் இதுஒன்று தான் உள்ளது. வேகமான அணு உலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கார்பைடு மற்றும் ஆக்சைடு எரிபொருட்கள் இரண்டையும் மறுசுழற்சி செய்யும் திறன் கொண்டது. இது முற்றிலும் இந்திய விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெரிய வணிக அளவிலான விரைவான அணு உலை எரிபொருள் மறுசுழற்சி ஆலைகளை உருவாக்குவதற்கான ஒரு முக்கியமான படியை இது குறிக்கிறது.

திருச்சிராப்பள்ளியில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தின் (என்ஐடி) 500 படுக்கைகள் கொண்ட மாணவர் விடுதியையும் பிரதமர் திறந்து வைத்தார்.

– கு.தீபக்



வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
SDA
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance
Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.

# பூவுலகைக் காக்க போர்வேகம் தேவை!

**கட்டுரையாளர்:** அன்புமணி இராமதாஸ், தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி.

நன்றி: தினமணி



காளையை கட்டுவது இருக்கட்டும்... கயிற்றைத் தேடி கண்டுபிடிப்பதே பெரும்பாடாக இருக்கிறதே என்பார்கள். காலநிலை மாற்றத்தின் தீயவிளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் இதுவரை அப்படிப்பட்டதாகத்தான் இருந்தன.

காலநிலை மாற்றத்தின் விளைவுதான் இம்மாதத்தின் தொடக்கத்தில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இடைவிடாமல் பெய்த மழையும், அதனால் ஏற்பட்ட வெள்ளமும். கடந்த வாரம் நெல்லைச் சீமை வெள்ளத்தில் மிதந்ததற்கும் இதுவே காரணம். இது நாளை எங்கு வேண்டுமானாலும் நடக்கலாம். காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடங்கி 31 ஆண்டுகளாகி விட்ட நிலையில், இப்போது தான் துபாயில் நடைபெற்ற 28-ஆம் காலநிலை மாற்ற மாநாட்டில் (சிஓபி 28) பெட்ரோல், டீசல், நிலக்கரி போன்ற படிம எரிபொருள்களிலிருந்து படிப்படியாக மாறுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆம், காலநிலை மாற்றம் எனும் காளையை கட்ட கயிற்றை தேடிக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஐ.நா.வின் 28-ஆம் காலநிலை மாற்ற மாநாடு மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் துபாயில் கடந்த நவம்பர் 30 தொடங்கி டிசம்பர் 13 வரை நடைபெற்றது. இம்மாநாட்டில் நானும் கலந்து கொண்டேன். உலகின் 198 நாடுகளின் தலைவர்கள், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் என 85,000 பேர் பங்கேற்றனர். பயனுள்ள விவாதங்கள் நடைபெற்றன.

புவிவெப்பமயமாதலைக்கட்டுப்படுத்துவதற்கானமுயற்சிகள் 1991-92 -இல் தொடங்கின. அதன்பின் 23 ஆண்டுகள் கழித்து 2015-இல் பாரீசில் நடைபெற்ற காலநிலை மாநாட்டில்தான் தொழிற்புரட்சி காலத்திற்கு முன் 14 டிகிரி செல்சியஸாக இருந்த புவி மேற்பரப்பு சராசரி வெப்பநிலையின் உயர்வை 1.5 டிகிரி செல்சியஸுக்குள், அதாவது 15.5 டிகிரி செல்சியஸுக்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்பின் எட்டுஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், வெப்பநிலை உயர்வு இப்போதே 1.2 டிகிரி செல்சியஸ் என்ற அளவை எட்டி விட்ட நிலையில், ஆக்கபூர்வமாக எதையாவது செய்தாக வேண்டிய கட்டாயம் உலகிற்கு இருந்தது. அந்த நெருக்கடிதான் படிம எரிபொருட்களின் பயன்பாட்டை படிப்படியாக குறைக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படுவதற்கு காரணம்.

இந்த முடிவின் அடிப்படையில், கார்பன் டை ஆக்சைடு உள்ளிட்ட பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தை, கடந்த 2019-இல் இருந்த அளவைவிட 43% 2030-ஆம் ஆண்டிலும், 60% 2035-ஆம் ஆண்டிலும் குறைக்க வேண்டும். அவ்வாறு குறைப்பதன் மூலம் 2050-ஆம் ஆண்டில் கரிம சமநிலையை எட்ட முடியும் என்பதுதான் இந்த முடிவை எடுப்பதற்கான நோக்கம் ஆகும்.

இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டன. அவற்றை எட்டுவது எளிதானதா? காளையை கட்ட கயிற்றை எடுத்திருக்கிறோம், அந்தக் காளையை அடக்கி, கயிற்றால் கட்டுவது எவ்வளவு கடினமானதோ அதைவிட கடினமானது மேற்கண்ட இலக்குகளை எட்டுவது.

பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பது குறித்து வளர்ந்த நாடுகள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளன. அந்த வாக்குறுதிகள் 100% நிறைவேற்றப்பட்டால் கூட, 2030-ஆம் ஆண்டில் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றம் 2019-இன் அளவைவிட, 2% மட்டுமே குறைவானதாக இருக்கும்.

ஆனால், நமது புதிய இலக்கோ 43%. இலக்கிற்கும் எதார்த்தத்திற்குமான இடைவெளி, மலைக்கும் மடுவுக்கும் இடையிலான இடைவெளியாகவே இருக்கிறது. இதை இட்டு நிரப்புவது என்பது அவ்வளவு எளிதானதல்ல.

இன்னொருபுறம், உலகின் எந்த நாடும் படிம எரிபொருட்களின் பயன்பாட்டை குறைப்பதற்கு தயாராக இல்லை. ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தின் அடிப்படையில் வெளி-யிடப்பட்ட புள்ளிவிவரப்படி, உலக நாடுகள் பயன்படுத்தும் படிம எரிபொருட்களின் அளவு 2019-இல் இருந்ததைவிட, 2030-இல் 110% அளவுக்கும், 2050-இல் 350% அளவுக்கும் அதிகமாக இருக்கும். இப்படி, இலக்கும் எதார்த்தமும் வெவ்வேறு திசைகளில் பயணிக்கும்போது, எப்படி இலக்கை எட்ட முடியும்? இலக்கை எட்ட எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படவுள்ளன என்ற வினாவிற்கு, நடந்து முடிந்த துபாய் காலநிலை மாற்ற மாநாட்டுத் தீர்மானத்தில் விடை இல்லை.

காலநிலை மாற்றம் என்ற பேரழிவில் இருந்து பூவுலகைக் காக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். ஆனால், அனைத்து நாடுகளுமே உலக நலனை ஒதுக்கிவைத்துவிட்டு, தங்கள் நலனுக்கு மட்டுமே

முக்கியத்துவம் அளிப்பதால், இலக்கை எட்டுவது இயலாத ஒன்றாகவே தோன்றுகிறது.

எடுத்துக்காட்டாக, படிம எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்பதுதான் மாநாட்டு தீர்மானத்தின் நோக்கம். ஆனால், அதை மாநாடு நடைபெற்ற வளைகுடா பகுதியில் உள்ள எண்ணெய் வள நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த முடிவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என அந்த நாடுகளை ஐ.நா. சபை கட்டாயப்படுத்தவும் இல்லை.

மாறாக, அந்த நாடுகளை திருப்திபடுத்தும் வகையில், படிம எரிபொருட்களின் பயன்பாட்டை குறைக்க வேண்டும் (ஃபாஸ் அவுட் ஃபாஸில் ஃப்யூல்ஸ்) என்ற வலிமையான வாசகத்தை நீர்த்துப்போகச் செய்து, படிம எரிபொருட்களின் பயன்பாட்டில் இருந்து மாறவேண்டும் (ட்ரான்ஸிட்யோனிங் அவே ஃப்ரம் ஃபாஸில் ஃப்யூல்ஸ் இன் எனர்ஜி சிஸ்டம்ஸ்) என்ற உறுதியற்ற வாசகம் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

படிம எரிபொருட்களின் பயன்பாட்டை ஏதேனும் நாடுகள் குறைக்கவில்லை என்றால், அதற்காக அந்த நாடுகளை ஐ.நா. கண்டிக்க முடியாது என்பதுதான் இதற்குப் பொருள்.

படிம எரிபொருட்களின் பயன்பாட்டைக் கைவிடும்போது, அதற்கு மாற்றாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் உற்பத்தியை மும்மடங்காகவும், மின்சாரத்தின் பயன் திறனை இரு மடங்காகவும் 2030-ஆம் ஆண்டிற்குள் உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக ஆண்டுக்கு ரூ.345 லட்சம் கோடி (4.3 லட்சம் கோடி டாலர்) வீதம் அடுத்த ஏழு ஆண்டுகளில் ரூ.2,215 லட்சம் கோடி முதலீடு செய்தாக வேண்டும். அதற்கான நிதி எங்கிருந்து வரும் என்பதை ஐ.நா. அமைப்பு இதுவரை தெரிவிக்கவில்லை.

அதேபோல், வெப்பநிலை உயர்வுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்வதற்கான இலக்குகளை நிர்ணயம் செய்தல், அதற்காக முதலீடு செய்தல் ஆகியவை குறித்து துபாய் காலநிலை மாற்றத் தீர்மானத்தில் துல்லியமான தகவல்கள் இல்லை. புவிவெப்பமயமாதலால் ஏற்படும் இழப்புகளையும், சேதங்களையும் சமாளிக்க தனி நிதியம் (லாஸ் அண்டு டேமேஜ் ஃபண்ட்) ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஏழை நாடுகளின் கோரிக்கையை ஏற்று, தனி நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த நிதியத்திற்கு உலக நாடுகள் வழங்கவிருக்கும் தொகை ரூ.6,563 கோடி (79.2 கோடி டாலர்) மட்டுமே. இது புவிவெப்பமயமாதலால் ஏற்படும் இழப்புகள், சேதங்களைத் தடுப்பதற்காக தேவைப்படும் நிதியில் 0.1% கூட இல்லை என்பது வேதனையான உண்மை.

ஆனாலும், இவற்றையெல்லாம் காரணம் காட்டி காலநிலை மாற்றத்தின் தீய விளைவுகள் பெருகுவதை அனுமதிக்க முடியாது. கயிற்றை எடுத்த நாம் காளையை அடக்காமல் ஓய முடியாது. அவ்வாறு செய்தால் தமிழகத்திற்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகிற்கும் ஏற்படும் பேரழிவைத் தாங்க முடியாது.

காலநிலை மாற்றத்தின் தீயவிளைவுகளை சென்னை ஏற்கனவே அனுபவிக்கத் தொடங்கி விட்டது. முன்பெல்லாம் எப்போதோ ஒரு முறை மட்டுமே சென்னையைத் தாக்கி வந்த வெள்ளம், இப்போது அடிக்கடி அழிவை ஏற்படுத்தத் தொடங்கி விட்டது. 2005-க்கு பிறகு இதுவரை நான்கு முறை பெருவெள்ளம் சென்னையைத் தாக்கியுள்ளனது. ஒவ்வொரு வெள்ளமும் அதற்கு முந்தைய வெள்ளத்தை விட பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

2015-ஆம் ஆண்டின் வெள்ளத்தை விட மோசமான வெள்ளத்தை இனி பார்க்கவே முடியாது என்று பலரும் கூறி வந்த நிலையில், அதை விட பயங்கரமான வெள்ளத்தை இம்மாதத் தொடக்கத்தில் சென்னை சந்தித்தது.

அதிலிருந்து மீண்டு வர முடியாமல் இன்னும் தவித்துக் கொண்டிருக்கிறது. சென்னை வெள்ளத்தால் அனைத்துத் துறையினருக்கும் ஏற்பட்ட இழப்பின் மொத்த மதிப்பு ரூ.5 லட்சம் கோடிக்கும் கூடுதலாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இன்னொருபுறம் தென் மாவட்டங்கள் மிகக்கடுமையான மழையை எதிர்கொண்டு வருகின்றன. காயல்பட்டினத்தில் ஒரே நாளில் 95 செ.மீ அளவுக்கும், இருநாட்களில் 116 செ.மீ அளவுக்கும் மழை கொட்டித் தீர்த்திருக்கிறது. இது கடந்த ஆயிரம் ஆண்டுகளில் பெய்யாத மழை ஆகும்.

பாதுகாப்பான பகுதிகள் என்று கருதப்படும் விமான நிலையம், தொடர்வண்டி நிலையம், பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவையே வெள்ளத்தில் மிதந்ததை பார்க்க முடிந்தது. வடகிழக்குப் பருவமழை காலத்தில் தென்மாவட்டங்களில் மழை சேதத்தை ஏற்படுவது கடந்த கால வரலாற்றில் நடக்காதது.

இனிவரும் காலங்களில் திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட நகரங்களிலும் இத்தகைய பெருமழை கொட்டும். அதுமட்டுமின்றி, புவிவெப்பமயமாதலால் பெருமழை இனி தொடர்கதையாகும்; சில மாதங்களின் மழை ஓரிரு மணி நேரங்களில் பெய்யும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இவற்றைத் தடுக்க உள்ளூர் அளவிலிருந்து உலக அளவு வரை ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு, '2040-ஆம் ஆண்டுக்குள் கரிமச்சுழிம நிலையை (நெட் ஜீரோ) அடைவோம்' என்ற முதலமைச்சரின் அறிவிப்பு செயலாக்கம் பெறவேண்டும். அனைத்து அனல்மின் நிலையங்களும் மூடப்பட வேண்டும்.

தமிழ்நாட்டின் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊரக உள்ளாட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்களிலும் கார்ப்பரேட் தனியார் நிறுவனங்கள், பொது அமைப்புகள், கூட்டமைப்புகள் ஆகியவற்றிலும் காலநிலை மாற்ற செயல்திட்டத்தை (ஆக்ஷன் ப்ளான் ஃபார் க்ளைமேட் சேஞ்சி) உருவாக்கி செயல்படுத்த வேண்டும். அதற்காக ஒவ்வொரு நிலையிலும் போர்க்கால வேகத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளுக்கு நாம் ஒவ்வொருவரும் துணைநிற்க வேண்டும்.

துபாய் காலநிலை மாற்ற மாநாட்டுத் தீர்மானம் என்ற கயிற்றை எடுத்து விட்டோம்; காலநிலை மாற்றம் என்ற முரட்டுக்காளையை அடக்கியே தீருவோம்!

– பா. நவின்குமார்



செங்குன்றம் போக்குவரத்து காவல் சார்பாக நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆவடி காவல் ஆணையாளர் சங்கர் இ.கா.ப., அவர்கள் தலைமையில் 1000 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்கு தலைக்கவசம் வழங்கி பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. - ஜெபசீலன்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.01.2024 அன்று சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற “கலைஞர் – கலைஞர் 100” திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில் கலந்து கொண்டு, “நூற்றாண்டு கலை மலரை” வெளியிட்டார். இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், முன்னணி நடிகர்கள், நடிகர் சிவ ராஜ்குமார், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் பூச்சி முருகன், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் முரளி ராமநாராயணன், செயலாளர்கள் ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ்.கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், திரைத்துறையின் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், திரைப்படத் துறையின் தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். – Ba.சரவணன்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |




Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com

PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338

# அசைவ உணவை சாப்பிட்டு கோவிலுக்கு செல்ல கூடாது! ஏன்?





நாம் கோயிலுக்குச் செல்வது இறைவனை வணங்க தானே, அதற்கு நம்முடைய மனது தூய்மையாக இருந்தால் போதாதா? ஏன் அசைவ உணவை உண்டு விட்டு கோயிலிற்கு செல்லக்கூடாது என வீட்டில் உள்ள பெரியவர்கள் கூறுகின்றனர்? இப்படி பல கேள்விகள் பலர் மனதில் எழுவதுண்டு. அதற்கான அறிவியல் பூர்வமான விடையை காண்போம் வாருங்கள்.

மற்ற நாகரீகங்களில் எல்லாம் உணவு என்பது உடலில் உயிரை தக்க வைப்பதற்கும், தசைகளை பெருக்கி உடல் பலத்தை அதிகரிக்கச் செய்யும் ஒரு விடயமாகவே கருதும் வழக்கம் இருக்கிறது. ஆனால் இந்திய கலாச்சாரத்தில் மட்டுமே உண்ணும் உணவை இறைவனின் அருட்பிரசாதமாக பாவிக்கும் தன்மை காணப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களிலும் இறவாவரம் தரும் இறைவனின் அருட் பிரசாதம் என்கிற பொருள் தரும் வகையில் உணவு சாப்பிடுவதற்கு அமுது உண்ணல், அமுது செய்தல் என உணவை குறிப்பிடும் சொற்றொடர்கள் அதிகம் கணக்கிடைக்கின்றன.

நாம் உண்ணும் உணவுக்கும், மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உதாரணமாக தயிர் அதிகமாக சாப்பிட்டால் தூக்கம் வருவது போன்ற உணர்வு ஏற்படுவதும், காரம் அதிகமாக சாப்பிட்டால் கோபம் வருவதையும் கூறலாம். பொதுவாக அசைவ உணவுகள் ஜீரணமாக அதிக நேரம் எடுத்துக் கொள்ளும் என்பதால் அது மனதளவில் மந்த நிலையை ஏற்படுத்தும்.

பொதுவாக கோயிலுக்குச் செல்லும் போது சுத்தமாகச் செல்ல வேண்டும். இங்கு சுத்தம் என்பது வெறும் உடலை மட்டும் குறிக்கவில்லை, மனதையும் சேர்த்துதான் குறிக்கிறது. மனதளவில் மந்தநிலையில் உள்ள ஒருவர் சூட்சும சக்திகள் நிலவும் கோயிலுக்குள் செல்லும் போது அந்த சக்திகளை உணரக் கூடிய ஆற்றலை இழந்து விடுகிறார். பொதுவாக இந்தியாவில் இருக்கின்ற அனைத்து இன மக்களும் சித்தர்கள், ரிஷிகள் போன்ற ஆன்மீக பெரியவர்களின் வழித்தோன்றல்களாக இருக்கின்றனர். அத்தகைய சித்தர்களும், ரிஷிகளும் இறையாற்றல் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இறையாற்றல் அதிகமாக பெருக்கெடுப்பதற்கு புலால் எனப்படும் மாமிச உணவுகளை உண்பதை அறவே தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கின்றனர். ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டிய உயர்வான நிலையான ஞானம் எனப்படும் தெய்வீக நிலையை அடைவதற்கு புலால் உணவு சாப்பிடுதல் பெரும் தடையாக இருப்பதாக ரிஷிகள், சித்தர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் யோகம், தியானம் போன்ற கலைகளில் கைதேர்ந்தவர்களான சித்தர்கள், ரிஷிகள் அசைவ உணவு சாப்பிடும் நபர்களின் உடல் மற்றும் மனம் பஞ்சபூதங்களிலிருந்து வெளிப்படுகின்ற இறை ஆற்றல் நிறைந்த பிராண சக்தி கிடைக்கப்பெறாமல் போகும் நிலை உண்டாகிறது. குறிப்பாக கோயில்களில் இந்த தெய்வீக பிராண சக்தி அதிக அளவில் நிறைந்துள்ளது. அசைவ உணவு சாப்பிடுவதை அறவே நீக்கியவர்கள், சிறிதளவு சைவ உணவுகளை சாப்பிட்டு கோயில்களுக்கு சல்பவர்களின் உடல் மற்றும் மனம் இந்த சுத்தமான

பிராண சக்தியை அதிகம் கிரகித்துக் கொள்ள முடிகிறது என தங்களின் அனுபவத்தின் மூலம் கண்டறிந்தனர்.

அசைவ உணவுகள் இத்தகைய நன்மை தரும் சூட்சும சக்தியை உணரும் ஆற்றலைக் குறைக்கும் தன்மை படைத்தவை. எனவேதான், கோயிலுக்குச் செல்லும் போது எளிமையான உணவை மிதமான அளவில் உண்டு, மனதில் உற்சாகத்துடன் இறைவனை தரிசிக்கச் செல்ல வேண்டும் என முன்னோர்கள் கூறுகிறார்கள்.

நமது பாவங்களை போக்கி புண்ணிய பலன்களை பெருக்கி கொள்ள கூடிய உயரிய இடமான கோயில்களுக்கு செல்லும் போது பிற உயிர்களை கொன்று செய்யப்படும் அசைவ உணவுகளை சாப்பிட்டு விட்டு கோயில்களுக்கு செல்வதால் ஏற்கனவே செய்த பாவங்களோடு இந்த புதிய பாவம் சேர்வதோடு, ஆற்றல் மிக்க தெய்வங்களின் சாபங்களையும் நமக்கு ஏற்படுத்திவிடும். எனவே முடிந்த வரை கோயிலுக்கு செல்லும் போது அசைவ உணவை சாப்பிடுவதை தவிர்ப்பது மிகவும் நன்மைகளை தரும் ஒரு செயலாக இருக்கும்.


ஒருவேளை அசைவ உணவைச் சாப்பிட்ட பின்னர் கோயிலுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், சாப்பிட்ட 3 அல்லது 4 மணி நேரத்திற்குப் பின்னர் குளித்துவிட்டு கோயிலுக்குச் செல்வது நல்லது. முனீஸ்வரன், சுடலை மாடன் போன்ற அசைவ உணவு படையல்களை ஏற்கின்ற கிராம தெய்வங்கள், காவல் தெய்வங்கள் இருக்கும் கோயில்களுக்கு அசைவ உணவு சாப்பிட்டு செல்வதால் எந்த ஒரு பாதகங்களும் இல்லை.

பொதுவாக அசைவம் சாப்பிடும் சமயத்தில் வீடு முழுவதும் துர்வாசனை வீசும். அதனால் நல்ல சக்திகள் வீட்டிற்கு வராது.

வீட்டில் விளக்கு ஏற்றினால் தெய்வ சக்திகளை வா என்று அழைப்பதற்கான சமிஞ்சை. அசைவம் சமைத்துவிட்டு விளக்கு ஏற்றினால், நாம் நல்ல சக்திகளை வா என்று அழைத்து விட்டு, உடனுக்குடன் அவமானப்படுத்தியதற்கு சமம். இதனால் நமக்கு பிரம்மஹத்தி தோஷத்திற்கு நிகரான தோஷம் ஏற்படும். இதன் காரணமாக பொருளாதாரம் பெரும் அளவில் பாதிக்கப்படும்.

எனவே விட்டில் அசைவம் சமைத்த அடுத்த நாள் காலையில் வீட்டில் வீட்டை கழுவி துர்வாசனை வராத அளவிற்கு சுத்தம் செய்து, குளித்துவிட்டு ஊதுபத்தி போன்றவற்றை ஏற்றி வீட்டை நல்ல வாசனைகளுக்கு உள்ளாக்கி அதன் பிறகு விளக்கு ஏற்றினால் லட்சுமி கடாட்சம் வரும்.

– கா.சுபுலட்சுமி





## உங்கள் ராசிக்கு எந்த ஆலயம் செல்வது சிறந்தது

1. மேஷம் - ராமேஸ்வரம்
2. ரிஷபம் - திருப்பதி
3. மிதுனம் - பழனி
4. கடகம் - ராமேஸ்வரம்
5. சிம்மம் - வாஞ்யசியம்
6. கன்னி - திருக்கழுக்குன்றம்
7. துலாம் - திருத்தணி
8. விருச்சிகம் - காஞ்சிபுரம்
9. தனுசு - மயிலாடுதுறை
10. மகரம் - சிதம்பரம்
11. கும்பம் - தேவிப்பட்டினம்
12. மீனம் - வைத்தீஸ்வரன் கோவில்

# பயனுள்ள மருத்துவ குறிப்புகள்;-



உணவு சாப்பிடுவதற்கு 1/2 மணி நேரத்திற்கு முன்னதாக தினசரி அரை டீஸ்பூன் ஆலிவ் எண்ணெய்யைச் குடித்து வந்தால், ரத்தக்குழாயில் கொழுப்பு படிவதைத் தடுக்கலாம்.



தக்காளி பழத்தை இரண்டாக நறுக்கி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.



மெலிந்த உடல் உள்ளவர்கள் வாரம் இருமுறை முருங்கைக் கீரை உண்டு வந்தால் உடல் தேறும்.இரத்தம் சுத்தமடையும்.



பூவரசு பூவை எடுத்து சிறிது விளக்கெண்ணெய் சேர்த்து நன்றாக அரைத்து வெடிப்பு மீது தடவி வந்தால் பித்த வெடிப்பு குறையும்.




PENA KURAL TAMIL MONTHLY

**பேனா குரல்**

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

**RNI No.: TNTAM/2022/85375**

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர்:
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா. சி**, B.E.,

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், M.சந்திரசேகர், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், ம.திலிப் குமார், பா.சரவணன், K.மாரிதுரை, A.தங்கராஜ்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், தமிழ் மணி, கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக், தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ், பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,**

புகைப்பட நிருபர்கள்:
**வா.கவியரசன், கா.மிதுன் சாய்**

ஓவியங்கள்: **வீ.சந்தோஷ் குமார்**

சட்ட ஆலோசகர்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. நாகராஜ்**, B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com

* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*



தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine Re - work
High Quality
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368




**PENA KURAL,** Tamil Monthly, January 2024
Registrar of Newspapers for India - Registered No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**